# வாழைச்சேனை

## ஒரு வரலாற்றுக் குறிப்பு

வை. அஹமத்

பி.ஏ. டிப்-இன்-எட்., எஸ். எல். ஈ. எ. எஸ்.



மஸ்ஜிதுல் ஹைறாத்

பொது நூலகம்

# வாழைச்சேனை

## ஒரு வரலாற்றுக் குறிப்பு

பொது நூலகம்
கோறளை மேற்கு பிரதேச சபை
ஓட்டமாவடி.

கோறளை மேற்கு பிரதேச சபை
ஓட்டமாவடி.
24-12-1992
Koralai West Pradeshiya Sabha
Oddamavadi.

**வை. அஹமத்**

பி. ஏ. டிப்-இன்-எட்., எஸ். எல். ஈ. ஏ. எஸ்.

Acc. No: 1357
Class No:

Valaichenai Education Development Circle
Valaichenai.

வெளியீடு:

முஸ்லிம் சமூக சேவைகள் அமைப்பு
வாழைச்சேனை.

## நூல் விபரம்

தலைப்பு : வாழைச்சேனை - ஒரு வரலாற்றுக் குறிப்பு.

வகை : வரலாறு.

ஆசிரியர் : வை. அஹமத்.

மொழி : தமிழ்.

வெளியீடு : முஸ்லிம் சமூக சேவைகள் அமைப்பு,
வாழைச்சேனை.

பிரசுரம் : 1992 ஒக்டோபர்.

பக்கம் : 38.

பிரதிகள் : 500.

அச்சகம் : புனித வளனார் கத்தோலிக்க அச்சகம்,
மட்டக்களப்பு.

## Bibiliographical Data

Title : VALAICHENAI ORU VARALATTUK KURIPPU.

Author : Y. AHAMED, B. A. Dip-in-Ed.

Language : Tamil.

Publishers : Muslim Social Services Organization (MSSO),
Valaichenai.

Date of Publication : 1992 October.

Pages : 38.

Copies : 500.

Printers : St. Joseph's Catholic Press,
Batticaloa.

1362
பொது நூலகம்
ஓட்டமாவடி.

# முன்னுரை

வாழைச்சேனை - ஒரு வரலாற்றுக் குறிப்பு என்னும் இச்சிறு நூலை வெளியிடத் துணிவதற்கு இரு முக்கிய காரணங்கள் உண்டு.

★ மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்னெடுங் காலமாக ஒற்றுமையாக வாழ்ந்த தமிழர் – முஸ்லிம்களிடையே வேற்றுமையை உருவாக்கி வேடிக்கை பார்க்கும் ஒரு கூட்டத்தினருக்கு இம்மாவட்டத்தில் வாழும் முஸ்லிம்களின் வரலாறு தெரியாதிருக்கின்றது.

தமிழர்களின் சகோதரர்களாக - இரத்த உறவு கொண்டவர்களாக - தமிழையே தாய்மொழியாகக் கொண்ட மட்டக்களப்பு முஸ்லிம்கள் யார் என்பதை எடுத்துக் காட்ட வேண்டுமென்ற ஆர்வம் என்னுள் எழுந்தது.

அதனால், வாழைச்சேனை முஸ்லிம்களின் வரலாற்றைக் கூறுவதன்மூலம், மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வரலாற்றையும் கூற முற்பட்டுள்ளேன்.

இவ்வரலாறு இன்னும் ஆராயப்படவேண்டும்.

★ ஒரு கிராமத்தின் வரலாற்றில் பல்வேறு முன்னோடிகளின் சேவைகள், அக்கிராமத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும், உந்துதலாகவும் இருந்திருக்கும். காலப்போக்கில் அம்முன்னோடிகள்பற்றி, பின்வருவோர் எதுவும் தெரிந்துகொள்வதில்லை. அல்லது அவர்களது சேவையினை வெளிப்படுத்தாது மூடி மறைப்பதுண்டு. இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் நடந்துள்ளது.

நிகழ்காலத்தவர்கள், தமது முன்னோடிகளின் சேவையினை மறந்துவிடுவதனால், வருங்காலச் சந்ததியினருக்கு எதுவும் தெரிவதில்லை. ஒவ்வொரு கிராமத்திலுள்ளவர்களும், தமது முன்னோர்களின் நடவடிக்கைகள், சேவைகள், போக்குகள்பற்றி அறிந்துகொள்வது அவசியம். அதற்கான பதிவுகள் பேணப்படல்வேண்டும்.

இந்த இரு எண்ணங்களுமே இந்நூலை எழுதுவதற்கான முகாந்திரங்கள் எனக் கூறுவேன்.

எனது முயற்சி எவ்வளவு தூரம் வெற்றியடைந்துள்ளது என்பதை வாசகர்கள் கணித்துக்கொள்ளலாம்.

நமது முன்னோர்களின் வரலாற்றைக் கேட்டறிந்துகொள்ள நமது ஊரில் முதியவர்கள் யாருமில்லை. எவ்விதமான குறிப்புகளும் இதுவரை பேணப்படவுமில்லை.

பள்ளிவாசல் நிருவாக சபையினர் இதற்கான முயற்சியில் ஈடுபடுவது அவசியம். நமது வரலாறுபற்றிய குறிப்புகளை எழுதிப் பேணவேண்டும். அன்றாட நிகழ்வுகளில் முக்கியமானவை பதிவுகளாக இருக்கவேண்டும். பள்ளிவாசலில் இக்குறிப்புப் புத்தகமொன்று பேணப்படுமானால் வருங்கால ஆராய்ச்சியாளருக்குப் பேருதவியாக இருக்கும்.

இந்நூலில் இடம்பெற்ற குறிப்புகள் பலரிடம் சேகரித்தவை. பல நூல்களைப் படித்துப் பெற்றவை. இது பூரணத்துவமுடையது என்று நான் கருதவில்லை. மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் வரலாறு இன்னும் நன்கு ஆராயப்படவேண்டும்.

தமது வரலாறு, சமூக அமைப்பு, சமூகத் தேவைகள் என்பவற்றை உணராத எந்தச் சமுதாயமும் இன்றைய காலத்தின் வளர்ச்சியில் எதிர்வினை கொண்டு செயலாற்ற முடியாது. நம்மைப்பற்றி நாம் அறிந்துகொள்ளாவிட்டால், எதிர்காலத்தில் நாம் அடிமைகளாக வாழவேண்டி ஏற்படும்.

அந்தவகையில் இச்சிறுநூல் வழிகாட்டியாக அமையவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

இந்நூலை வாழைச்சேனை முஸ்லிம் சமூக சேவைகள் அமைப்பு வெளியிடுகிறது.

எம். ஐ. எஸ். முகம்மது மௌலவி, எம். ஐ. அப்துல்லாஹ் ஹாஜி ஜே.பி., எம். எஸ். ஏ. காதர், எம். ஏ. சி. எம். ஜுனைத் மௌலவி ஆகியோர் இந்நூலை எழுதுவதற்கு நல் ஆலோசனைகள் வழங்கினர்.

எம். எம். அப்துல்காதர் ஹாஜி ஜே.பி., கே. சாஹுல்ஹமீது ஹாஜி, எஸ். எல். சரீப் ஹாஜி, ரி. லெப்பைத்தம்பி ஹாஜி, எம்.எல். அச்சிமுகம்மது ஹாஜி, எம். எச். எம். முகைதீன் ஜே பி., எம். ஐ. அசனார் ஹாஜி, எம். ரி. எம். யூசுப் ஹாஜி, எம் ஐ. எஸ். முகம்மது மௌலவி ஆகியோர் இந்நூல் வெளியிட பொருள் உதவி வழங்கினர்.

செல்வி கதிராமர் தங்கேஸ்வரி (கலாசார உத்தியோகத்தர், கச்சேரி, மட்டக்களப்பு) அவர்கள் இந்நூல் அமைப்புக்கு உறுதுணையாக இருந்தார்.

இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டு உதவியவர்கள் மட்டக்களப்பு புனித வளனார் கத்தோலிக்க அச்சகத்தினர்.

இவர்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான இனிய நன்றிகள் எப்போதும் உண்டு.

பிரதான வீதி,
வாழைச்சேனை.
*1992-9-2.*

வை. அஹமத்.

# வாழைச்சேனை அமைவிடம்

(இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வாழைச்சேனை மிக முக்கிய நகரங்களில் ஒன்றாகும்.

இந்நகரம் மட்டக்களப்பிற்கு வடக்கே இருபது மைல் தொலைவிலும், பொலன்னறுவைக்குக் கிழக்கே முப்பத்தைந்து மைல் தொலைவிலும் அமைந்துள்ளது.

வாழைச்சேனைக்கூடாகச் செல்லும் புகையிரதப்பாதையும் பிரதான வீதியும் கிழக்கிலங்கையை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் இணைப்பதனால் இந்நகரம் கேந்திர முக்கியத்துவமுடையதாகத் திகழ்கின்றது.

வாழைச்சேனையின் மேற்கிலிருந்து வடக்கு எல்லையாக, வாழைச்சேனை ஆறு எனப் பெயர் பெற்ற மதுறுஓயாவின் வடிச்சல் செல்கிறது. வாழைச்சேனை ஆறு கிழக்கிலே பாசிக்குடாவின் வடக்கு முனையில், வங்காள விரிகடலுடன் இணைகின்றது.

தெற்கில் ஓட்டமாவடி என்னும் முஸ்லிம் கிராமம் உள்ளது. வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதி, கிழக்குப் பகுதியை இரு கூறாகப் பிரிக்கின்றது. வாழைச்சேனை கிழக்கில் தமிழரும், மேற்குப் பிரதேசம் முழுவதும் முஸ்லிம்களும் வாழ்கின்றனர். வாழைச்சேனையின் கிழக்கு எல்லையாகப் பேத்தாழைக் கிராமம் உள்ளது.

வாழைச்சேனை நகரில் பெரும்பான்மையாக வாழுவோர் முஸ்லிம்களாவர். இந்நகரின் பிரதான சந்தையும், கடைகளும் வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் பரிபாலனத்தின் கீழேயே செயல்படுகின்றன. இங்குள்ள கிராமசபை வளவு கிராமக்கோடு வளவு என்பன இப்பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களாலேயே அரசுக்கு வழங்கப்பட்டன.

வாழைச்சேனையின் வடக்கில், ஆற்றுடன் இணைந்து தற்போது மீன்பிடித் துறைமுகததிற்கென ஒதுக்கப்பட்ட இடம் ஒரு காலத்தில் பிரபல்யம் பெற்று, விளங்கியது. தபால்துறை அல்லது வங்களாத்துறை என வழங்கப்பட்ட இவ்விடம், மட்டக்களப்பிற்கும், திருகோணமலைக்குமிடையிலான போக்குவரத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

இந்த வசதியே தபால்துறை, கல்குடாத்துறைமுகம் என்பனவற்றின் வளர்ச்சிக்கும், வாழைச்சேனை நகரின் வளர்ச்சிக்கும், பிரபல்

யத்திற்கும் உறுதுணையாக விளங்கிற்று. இரண்டாம் உலக யுத்தம் கல்குடா துறைமுகத்தை முடமாக்கியது. வாழைச்சேனை ஆற்றின் மேற்குப் புறத்தில் போடப்பட்ட பெரும் பாலம், புகையிரத, மோட்டார் போக்குவரத்திற்கு வழி அமைத்ததால், தபால் துறையினூடாகக் திகழ்ந்த படகுச்சேவையும் நின்றது.

ஆயினும் இந்நகரம் தொழிற்துறை வளர்ச்சியினாலும், நாட்டின் ஏனைய பகுதிகளுடனான போக்குவரத்திற்கு முக்கிய ஒரிடமாக அமைந்துள்ளதாலும் சிறப்படைந்தது. கிழக்கிலங்கையின் முதற் தொழிற்சாலை வாழைச்சேனையில் அமைந்துள்ள கடதாசியாலையாகும். இத்தொழிற்சாலையினாலும் வாழைச்சேனை பிரபலமடைந்தது.

வாழைச்சேனையின் வடக்கிலுள்ள வெருகல், வாகரை, தொடக்கம் தெற்கிலுள்ள வந்தாறுமூலை வரை உள்ள மக்கள் அனைவரும் வாழைச்சேனையுடன் தொடர்புடையவர்களாகவே விளங்குகின்றனர். இவர்கள் தமக்குத் தேவையான பொருட்களை வாங்கவும், தமது உற்பத்திப்பொருட்களை விற்கவும், வாழைச்சேனைச் சந்தையைப் பயன்படுத்துகின்றனர்.

வாழைச்சேனை நகரம் கிழக்கிலங்கையில் தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு பேர்பெற்ற இடமாகத் திகழ்கின்றது.)

# வாழைச்சேனையில் முஸ்லிம்களின் குடியேற்றம்

(வாழைச்சேனைப் பிரதேசத்தில் தமிழரும் முஸ்லிம்களும் வாழுகின்றனர். இப்பிரதேசம் இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு காடடர்ந்த பிரதேசமாகவே இருந்தது. இங்கு கல்குடாத் துறையையொட்டிய பகுதியில் ஆதிக்குடிகளான வேடுவர் வசித்து வந்தனர். மலைநாட்டிலும் இருந்து குடிப்பெயர்ச்சிகள் இடம்பெற்றபோது, முஸ்லிம்களும் தமிழரும் இங்கு குடியேறினர்.)

ஆரம்பத்தில் வாழைச்சேனை ஆற்றின் தெற்குக் கரை முழுவதும், கிழக்கில் தற்போதுள்ள, கருங்காலிச்சோலைக்குடாத் தொடக்டம், மேற்கு நோக்கி, தைக்காப்பள்ளிவாசல்துறை வரை முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் பரவி வளர்ச்சியடைத்தன. முஸ்லிம்களின் முதற் குடியிருப்பு கிழக்கில் பாசிக்குடாவின் வடக்குமுனையில் கருங்

காலிச்சோலைக்குடாவிலேயே நிகழ்ந்தது. இக்குடியிருப்பின் தென் பகுதியில் வேடுவ இன மக்களும், பின்னர் தமிழரும் குடியேறினர்.

கருங்காலிச்சோலைக்குடா மீன்பிடித் தொழிலுக்கும், பயிர்ச் செய்கைக்கும் வசதியான ஓரிடமாகும். இங்கு குடியேறிய முஸ்லிம் கள் இவ்விரு தொழில்களிலும் சிறப்பிடம் பெற்று விளங்கினர்.

வாழைச்சேனை ஆற்றின் மேற்குக்கரையோரமாக விளங்கிய மருங்கையடிப் பூவல் பிரதேசம், வடிச்சல் நிலமாயும், பயிர்ச்செய் கைக்கு உகந்ததாயும் விளங்கியதால் படிப்படியே முஸ்லிம்களின் குடி யிருப்புக்கள் அப்பிரதேசத்தை நோக்கி நகரலாயிற்று. இங்கு குடி யேறியோர் வாழைமரப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டனர். இதனால் பெரும் வாழைத்தோட்டங்கள் உருவாயின. சேனைப் பயிர்ச்செய்கை என்ற வகையில் வாழைச்சேனையென இவ்விடம் பெயர் பெறலா யிற்று. வாழைமரங்களை பெருமளவு செய்கை பண்ணிய நிலச்சொந் தக்காரர் வாழைச்சேனையார் எனவும் பெயர் பெற்றனர்.

மருங்கையடிப்பூவல் என அழைக்கப்பட்ட இப்போதுள்ள வாழைச்சேனை நான்காம் வட்டாரப் பிரதேசமே 'வாழைச்சேனை' என்ற பெயருக்குரியதாய் திகழ்ந்தது.

மருங்கையடிப்பூவல் என்ற பிரதேசத்தையொட்டி இருந்த, கசட்டையடி நாவலடி, வெம்பு ஆகிய இடங்கள் வாழைச்சேனை யுடன் இணைந்து பெயர் பெற்றன. நாவலடி, வெம்பு ஆகிய இடங் களில் நாவல் மரங்களும், காசான்பற்றைகளும், முந்திரிகை மரங் களும் நிறைந்து காணப்பட்டன. மிக அண்மைக்காலமாகமே இப் பிரதேசங்கள் மனித குடியிருப்புக்கு ஏற்றனவாக மாற்றமடைந்தன.

மருங்கையடிப்பூவலிலுள்ள சில பகுதிகள் காடு நிறைந்திருந்த தனால் குப்பைக்காடு என்று வழங்கப்பட்டது. குப்பைக்காடும் காலப் போக்கில் அழிந்துவிட்டது.

வாழைச்சேனை மட்டக்களப்பு பிரதான வீதி, தபால்துறை யுடன் இணைந்து கல்குடாவைச் சேர்ந்து சென்றது. வாழைச்சேனை பிரதான குறுக்கு வீதி, பெரும் பாலம் அமைப்புடன் பிரசித்தம் அடைந்தது. ஏனைய இடங்களில் மணல் ஒழுங்கைகள் இருந்தன. மணல் ஒழுங்கைகள் அனைத்தும் அண்மைக்காலமாக கிறவல் பாதை களாயின.

ஆரம்பத்தில் ஓலைக்குடிசைகளும், ஒரு சில கல் வீடுகளுமே இருந்தன. இன்று காணப்படும் முன்னேற்றம் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் ஏற்பட்டதே.

# கிழக்கிலங்கையில் முஸ்லிம்களின் வருகை

## ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்

வாழைச்சேனையில் குடியேறிய முஸ்லிம்கள் எங்கிருந்து வந்தனர்? இவர்களின் முன்னோரார் யார்?

இவ்வினாக்களுக்குரிய விடைகளை, ஆராய வேண்டுமாயின் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வருகை பற்றி ஒரு கண்ணோட்டம் செலுத்துவது அவசியமாகும். ஏனெனில் வாழைச்சேனை முஸ்லிம்களின் வரலாறு, கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாற்றுடன் தொடர்புடையது. அது மட்டுமன்றி தமிழ் மக்களின் வரலாற்றுடனும் மிக நெருங்கிய தொடர்புகொண்டிருக்கிறது.

வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடை ஆகிய இடங்களில் குடியேறிய முஸ்லிம்களின் வரலாறு காத்தான்குடி முஸ்லிம்களின் வரலாற்றுடனும், பெருமளவு மலைநாட்டு ராஜ்ஜியத்துடனும் தொடர்புபடுவதை வரலாற்றில் காணமுடிகிறது. காத்தான்குடியில் குடியேறியோரில் ஒரு பிரிவினரும், கண்டி, மன்னார் ஆகிய இடங்களில் குடியேற்றப்பட்ட ஒரு பிரிவினரும், இப்பிரதேசங்களில் குடியமர்ந்தனர் எனக் கொள்ளலாம்.

இலங்கைக்கும் அறபு நாடுகளுக்கும் மிக நீண்டகாலமாகத் தொடர்பு இருந்தமைக்கு வரலாற்றுச் சான்றுகள் நிறையவே உள்ளன.

அறபு நாடுகளின் வழித்தோன்றல்களான இலங்கை முஸ்லிம்கள் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ளமைக்கு ஆரம்ப காலத் தொடர்புகளே காரணமாகும். ஆதி காலத்தில் இலங்கையில் சிங்கள இனம் ஒன்று உருவாகுவதற்கு முன் இலங்கையின் ஆதிக் குடிகளாக இயக்கர், நாகர் என்போர் வாழ்ந்தனர். இக்குடிகளின் தாய்மொழி தமிழாகும். இவர்களுடன் தொடர்புகொண்ட ஆதி அறேபியர் தமிழ் மொழியில் பரிச்சயம் அடைந்தனர். எனவேதான் அவர்களின் சந்ததியினர் தமிழ்மொழியிற் தேர்ந்தனர்.

அறபு நாடுகளின் மக்கள், அங்கு ஆறாம் நூற்றாண்டில் தோன்றிய இஸ்லாத்தில் இணைந்தபோது, இலங்கையிலும் இஸ்லாம் அவர்களூடாகப் பரவியது.

அதனாற்றான் இந்த நாட்டில் எந்தப் பகுதியில் முஸ்லிம்கள் வாழ்ந்தாலும் அவர்கள் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

அறபுப் பிரஜைகள் இலங்கையில் குடியேறி வாழ்ந்தனர், ஆயினும் அவர்கள் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே இஸ்லாத்தைத் தழுவினர் எனக் கொள்ளவேண்டும்.

'முகம்மதியர் அல்லது சோனக மனிதர்' இத்தீவில் கி. பி. எட்டாம் நூற்றாண்டிலேயே குடியேறினர் என அலக்ஸ்சாண்டர் ஜோன்ரன் என்பவர் கூறுகிறார். இவருடைய கூற்றுப்படி அவர்கள் கலிபா மாலிக் பின் மர்வானின் கொடுங்கோன்மையால், அவனால் அரேபியாவிலிருந்து துரத்தப்பட்ட ஹாஷிம் குடும்பத்தைச் சேர்ந்த அறபிகளாவர். அவர்கள் தெற்கு நோக்கி வந்து மலாக்காவின் தெற்கில் பல குடியேற்றங்களை நிறுவினர். அவர்களில் சிலர் புத்தளம் மாவட்டத்திலும் குடியேறினர்.

புத்தளத்தில் குடியேறிய முஸ்லிம்கள், முத்துக்குளிப்பிலும், தென்னைச் செய்கையிலும், நெற்பயிர்ச்செய்கையிலும் ஈடுபட்டனர். அத்துடன் வர்த்தகம், உப்பு உற்பத்தி முதலிய துறைகளிலும் முயற்சி மேற்கொண்டனர்.

புத்தளத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவம் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் குடிகளாகவுள்ள 'முக்குவக்குடி'களுடன் தொடர்புறுகின்றது. முக்குவக்குடியினருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம்களுக்கும் இடையே இரத்த உறவிலான தொடர்பு உண்டு என்பதற்கு வரலாற்றில் சான்றுகள் உள்ளன.

புத்தள மாவட்டத்தில் கொத்தான்தீவு என அழைக்கப்படும் கிராமத்தில் முக்குவர்கள் வசித்து வந்தனர். முக்குவக்குலத்தில் பிறந்த நங்கை நல்லாள் ஒருத்தியை மணமுடிக்க மாணிக்கத்தலைவன் என்ற ஒருவன் – அவன் அடுத்த மாவட்டத்தின் தலைவனாக இருந்தான் – விரும்பினான். அவளை அடையும் நோக்கத்துடன் அவன் முக்குவர்களின்மீது படை எடுத்துச் சென்றான். அவனுடைய படைகளைப் போர்க்களத்தில் சந்திக்க சக்தியற்றிருந்த முக்குவர்கள் அச்சமயம் புத்தளக்கடலில் தமது கப்பல் படைகளுடனும், ஆட்களுடனும் நின்றிருந்த அறேபியர்களான முஸ்லிம் வர்த்தகர்களை உதவி செய்யுமாறு கோரினர். அவர்கள் உதவி செய்ய முன்வந்தனர். அதனால் மாணிக்கத்தலைவனின் படைகள் முறியடிக்கப்பட்டன. அவனும் சிறைபிடிக்கப்பட்டுச் சிறைச்சேதம் செய்யப்பட்டான்.

இந்த உதவிக்கு உபகாரமாக கொத்தான்தீவு முக்குவ மக்கள் முஸ்லிம் வியாபாரிகளிடத்தில் தேவை எதுவெனக் கேட்டனர். அவர்

கள் அக்கிராம மக்கள் இஸ்லாத்தை ஏற்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்க, அக்கிராமத்தில் பெரும்பாலானோர் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவினர். இது வரலாற்றில் இடம்பெற்ற ஒரு சம்பவமாயினும், கிழக்கு மாகாண முஸ்லிம்களும் இவர்களது பரம்பரையைச் சேர்ந்தோரே என வரலாற்றாசிரியர்கள் காட்ட முனைகின்றனர்.

முக்குவப் பெண்களிடையே 'முக்காடு' எனும் தலையை மறைத்து புடைவையிடும் பழக்கம் இருந்தது. இது 'பர்த்தா' முறையிலிருந்து மாறுபட்டது என்பதைக் கவனிக்கவேண்டும். முஸ்லிம் பெண்களிடத்தில் உடுக்கும் புடைவையிலிருந்து முக்காடிடும் பழக்கம், புத்தளம் தொடக்கம், திருகோணமலை, மட்டக்களப்பு வரை பரவியுள்ளது. அதிலும் விசேட அமைப்புகள் இருப்பதை அவதானிக்கலாம்.

கிழக்கிலங்கையின் தென்பகுதியான அம்பாறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் பெண்களின் முக்காடிடும் வழக்கத்திலும், வடபகுதியான மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் பெண்களிடையேயுள்ள முக்காடிடும் பழக்கத்திலும் பெருத்த வேறுபாடு உண்டு. தென்பகுதிப் பெண்கள் தாம் உடுக்கும் புடைவையின் முந்தானையைப் பின்பக்கமாக இழுத்து மடித்து தலையில் முக்காடு போடுவர். இவ்வாறு முக்காடிடும் பழங்கம் இலங்கையில் வேறு எப்பகுதி முஸ்லில் பெண்களிடத்திலும் இல்லை. மட்டக்களப்பு மாவட்டத்து முஸ்லிம் பெண்களும், கண்டி மற்றும் தென் மாகாண முஸ்லிம் பெண்களும் தமது புடைவையின் முந்தானையை முன்பக்கமாக கொண்டு சென்று முக்காடு போடுவர். இவர்களின் சில பழக்க வழக்கங்களிடையே ஒற்றுமை இருப்பது காணக்கூடிய முக்கிய அம்சங்களாம்.

புத்தளத்திலும் மற்றும் மேல் மாகாணம், தென்மாகாணம் முதலிய இடங்களில் குடியேறிய முஸ்லிம்கள் அந்நியர்களான போர்த்துக்கீசர், டச்சுக்காரர் ஆகியோரின் ஆதிக்கத்திற்கும், கொடுமைக்கும் அஞ்சி உள்நாட்டில் கண்டி மன்னனிடம் தஞ்சமடைய நேர்ட்டது. இவ்வாறு தஞ்சமடைந்தோர் கண்டிக்கூடாக கிழக்கிலங்கையில் குடியேற்றப்பட்டனர் எனக் கருத இடமுண்டு. இதற்கான வரலாற்று ஆதாரங்கள் நிறையவே உண்டு.

புத்தளத்திலிருந்து கிழக்கு மாகாணத்தில் பதின்மூன்று முக்குவக் குடிகளில் ஏழு குடிகள் குடியேறினர் என ஒரு வரலாற்று ஆசிரியர் கூறுகிறார். கல்முனைப் பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்களிடையே முக்குவக்குடிமரபு இன்றும் நிலைத்திருக்கின்றது. எனினும் இது பற்றிய ஆராய்ச்சிகள் முடிவுறவில்லை.

மட்டக்களப்பு மாவட்டம் கண்டி மன்னன் ஆளுகைக்குட்பட்டிருந்த பிரதேசமாகும். சுதேசிகளான வேடுவரும், திமிலரும் சுதந்

திரமாக வாழ்ந்தனர். மட்டக்களப்பின் பாதுகாப்பிற்கு, கண்டியில் தஞ்சமடைந்த முஸ்லிம்களின் உதவியை கண்டி மன்னன் பெற்றான். முஸ்லிம்களின் பலசாலியானவர்களை படைப் பிரிவில் சேர்த்து, இங்கு அனுப்பினான். படைவீரர்களாக இங்கு வந்தோர் குடியிருப்புக்களை நிறுவினர் என்று கூறவும் இடமுண்டு. இது நிற்க,

கிழக்கு மாகாணத்திலுள்ள முக்குவர்கள் கி. பி. 5ம் நூற்றாண்டில், யாழ்ப்பாணத்திலிருந்து துரத்தப்பட்டவர்கள் என ஒரு வரலாறு கூறுகின்றது. கீரிமலையிலுள்ள கோயிலின் புனிதத்தன்மையைக் கெடுத்ததால், முக்குவர் விரட்டப்பட்டபோது அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் புகலிடம் தேடினர் என ஒரு பரம்பரைக் கதையும் உண்டு. இம்மாவட்டத்தில் வசித்த ஆரம்பக் குடிகளான வேடுவரும், திமிலரும் முக்குவர்களின் வருகையை எதிர்த்துப் போராடினர். முக்குவர்கள் தமது வலிமையினால், திமிலரை அடர்ந்தேற முடியாமல் தடுத்துவந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில், புத்தளத்தில் நிகழ்ந்ததுபோல முஸ்லிம்களின் உதவியை முக்குவர்கள் பெற்றனர்.

முஸ்லிம்களின் உதவி கிடைத்தமையால் முக்குவர்கள் திமிலரைத் தோற்கடித்தனர்.

உதவி செய்த முஸ்லிம்களுக்கு, கைமாறாக நிலம், பொன், பெண் ஆகிய மூன்றில் ஒன்றை ஏற்குமாறு கேட்டனர். முஸ்லிம்கள் முக்குவர்களின் பெண்களை அடைந்து தமது இரத்த உறவைப் பலப்படுத்தினர்.

ஆனால் கொத்தான் தீவில் இடம்பெற்ற நிகழ்ச்சிபோன்று இங்கு முக்குவர்கள் இஸ்லாம் மார்க்கத்தைத் தழுவியதாகச் சான்றுகளில்லை.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் முக்குவப் பெண்களிலிருந்து தோன்றினராயினும் இன்றும் முஸ்லிம்கள் தங்களை ஒரு பிரத்தியேக, தனித்துவமுடைய மக்களாகவே கருதுகின்றனர். கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பரம்பரையினர் கடலோடிகளாகவும், வர்த்தகத்துறையில் ஈடுபாடுள்ளவர்களாகவும் இருந்தனர். கண்டி மன்னனின் பாதுகாப்புப் படையிலும் சேவை புரிந்தனர். கடற்றொழில், வர்த்தகம், படை வீரர்களாகக் கடமைபுரிதல் என்பன அறேபியரின் பரம்பரைத் தொழில்கள் என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்.

இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் சிறந்த படைவீரர்களாயிருந்தனர் என்பது நிரூபிக்கப்பட்ட விடயமாகும். அவர்கள் பெரும் சிங்களப் படையில் ஒரு பிரிவினராவர். வெல்லாவாயப் போரில் முஸ்லிம்களது ஒட்டகப் படை ஒரு சிறப்பிடத்தைப் பெற்றது. இரண்டாம் இராஜசிங்க மன்னன் (1634 - 1684) தனது அரச

காணிக்கைச் சேலையில் இந்தப் படையை வரைந்து ஹிங்குராங் கொற்ற மகா தேவாலயத்திற்குச் சமர்ப்பித்தான். அவ்வாறு அவன் செய்தது, அவன் வெல்லவாயாவில் முஸ்லிம்களின் ஒட்டகப் படைப் பிரிவினரால் பெற்ற வெற்றியைக் கௌரவிப்பதற்காகும்.

எனவே சிங்கள அரசர்களின் படைகளில் இடம்பெற்ற முஸ்லிம் வீரர்கள் மட்டக்களப்பில் முக்குவர்களுக்கும், திமிலருக்கும் இடையே நடைபெற்ற போரில் முக்குவர்களின் சார்பில் போரிட்டனர் எனலாம்.

இதன்பேறாக, முஸ்லிம் ஆண்கள் முக்குவப் பெண்களை மண முடித்து, தமது பரம்பரையைக் கிழக்கிலங்கையில் நிலைநாட்டிக் கொண்டனர் என்பது தெளிவாகின்றது. இன்றும் கிழக்கு மாகாண முஸ்லிம் பரம்பரையினரின் உடலில் அறபு உதிரம் ஓடுகிறது என்ப தற்கு ஆதாரமாக, அவர்களது நீண்டுயர்ந்த 'செமிற்றிக்' நாசியைக் கொண்டு அவதானிக்கலாம் என வரலாற்றாசிரியர் கூறுவர்.

மட்டக்களப்பில் முஸ்லிம்கள் குடியேறிய வரலாறு முக்குவர் களுக்கு உதவி செய்தமையால் முக்குவர்கள் நன்றியுடையவர்களாக இருந்து அவர்கள் பெண்களையும் நிலத்தையும் வழங்கியதனால் ஏற் பட்ட உறவு முறையுடன் தொடர்புபடுகின்றது.

ஒரு காலத்தில் மலர்பார் கரையிலிருந்து கடலூடாகப் பிர யாணஞ் செய்த முஸ்லிம்களின் கப்பலொன்று, மட்டக்களப்பின் தெற்கே கரை தட்டிய இடம் பூனொச்சிமுனை எனக் கூறப்படுகிறது. கரையிலிருந்து சிறிது தூரத்தில் எழுந்த புகைமூலம் அவர்கள் ஒரு குடியிருப்பைக் கண்டனர். அதுவே காத்தான் என்னும் பெயரைக் கொண்ட வேடுவத் தலைவனது குடியிருப்பான காத்தான்குடி என அறிந்துகொண்டனர். புதுப் பிராந்தியம் வனப்பும், வளமும் கொண் டமைந்திருந்ததனால் கப்பலில் வந்தவர்கள் காத்தான்குடியில் குடி யேறினர். இந்த ஆரம்பக் குடிகளின் வழித்தோன்றல்களே மட்டக் களப்பு மாவட்டத்தின் ஏனைய பகுதிகளிலும் வாழும் முஸ்லிம்க ளாவார் எனக் கருதப்படுகிறது.

திமிலருக்கும் முக்குவர்களுக்குமிடையே இடம்பெற்ற போரில் முஸ்லிம்கள் உதவி செய்த வரலாறும், அதன் காரணமாக மட்டக் களப்பின் வடக்கு நோக்கி முஸ்லிம்கள் குடிபெயர்ந்த வரலாறும் ஒரே காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகளாகும். திமிலர்களின் தலைவனைச் சிறைப்பிடித்து அவனை அழித்ததன்மூலம் முஸ்லிம்களும் முக்குவர் களும் இணையுறவு கொண்டனர்.

திமிலர்களைத் துரத்தி வெற்றியடைந்தனர். திமிலர்கள் பனிச் சங்கேணிக்கு அப்பால் சென்று தப்பினர். பனிச்சங்கேணிக்கண்மையில்

தும்பங்குடாவில் தமது பிராந்தியத்தையும், முக்குவர்களது பிராந்தியத்தையும் பிரித்துக் காட்டுவதற்காக இரு சாராரும் இட்ட எல்லையடையாளமான, சாம்பல் நிறக் கருங்கல் இன்றுமுள்ளது. இதுவே 'தூணடி' எனப்படுகின்றது.

பனிச்சங்கேணியிலும் அதன் அயல் கிராமங்களிலும் முஸ்லிம்களின் ஆதிக்கம் கடந்த இருநூறு ஆண்டுகளாக இருந்தமைக்குச் சான்றுகள் ஏராளம் உள்ளன. அவர்க்கர்குடா, விசாரணைத்தீவு, ஆலிமுட ஊற்று, சுவாலியார் ஊற்று ஆகிய இடப்பெயர்களும், காரமுனை கபுறடி, காணிக்கை வேப்பையடி, மேவான்குளம் என்பனவும் முஸ்லிம்களின் வரலாற்றுடன் பின்னிப்பிணைந்தவையாகும்.

மீராப்புள்ள சோதயன் என்பவர் கட்டிய குளம்தான் மேவான் குளம் எனக் கூறப்பட்டது. சோதயன் கட்டு என ஒரு அணைக்கட்டும் இப்பிரதேசத்திலுண்டு. ஏறக்குறைய 300 வருடங்களுக்கு முன் இப்றாகீம் கண்டு வைத்தியர் என்பவர் கண்டி மடவளை பஸாரிலிருந்து காரமுனைக் கண்டத்தில் குடியேறினர் எனவும் கூறப்படுகிறது. இவருக்குப்பின் சுலைமான்கண்டு, இசுமான்கண்டு எனப் பல பேர் இங்கு வாழ்ந்தனர். கொட்டார் விதானை என அழைக்கப்பட்ட அகமதுலெவ்வை விதானையார் பிரித்தானியராட்சிக்காலத்தில் பொலிஸ் தலைமையதிகாரியாகப் பனிச்சங்கேணி - மாங்கேணி பிரதேசத்தில் நீண்ட காலம் கடமையாற்றினார்.

மாங்கேணி, பனிச்சங்கேணி, காரமுனை போன்ற இடங்களில் முஸ்லிம்கள் குடியேறி வாழ்ந்தனர். இப்பகுதிகளில் நிருவாகப் பொறுப்புகளும் நீண்டகாலமாக முஸ்லிம்களின் கைகளிலேயே இருந்தன.

மாங்கேணியில் கலந்தர் போடியார் குடும்பம், வதவிப் போடியார் குடும்பம் என்பன இருந்தன. பனையோலையில் எழுதிய காணி உறுதிகளும் இவர்களின் பரம்பரையினரின் இடத்தில் இன்றும் இருக்கின்றன.

காரமுனையில் அடக்கப்பட்டுள்ள ஒரு முஸ்லிம் பெரியாரின் 'சியாரம்' இப்பகுதியில் பிரசித்திபெற்ற இடமாகும். இங்கு அடக்கம் செய்யப்பட்டுள்ள பெரியார் குடும்பமாக வாழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. ஏனெனில் 'சியாரம்' அமைந்திருக்கின்ற இடத்தின் எல்லையைக் காட்டுவதற்கு நான்கு புளிய மரங்கள், நான்கு மூலையிலும் நடப்படடிருப்பதுடன் சுற்றுப்புறச் சூழல் முழுவதும் இன்றும் வயலும், வயல் சார்ந்த நிலமாகவும் இருப்பது காணக்கூடியதாகவுள்ளது.

முக்குவர்களும், திமிலர்களுக்குமான போராட்டத்தைக் குறிக்கும் இடப்பெயர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் வட பகுதியில்

இருக்கின்றன. 'சந்துருக்கொன்றான்' என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. இவ்விடத்தில் வைத்தே திமிலர் தலைவன் சிறைபிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான். பனிச்சங்கேணி வரை இவர்கள் துரத்தியடிக்கப்பட்டபோது பத்தி என்னும் திமிலத் தலைவி சிறை பிடிக்கப்பட்டுத் தூக்கிலிடப்பட்டாள். இவளைத் தூக்கிலிட்ட இடம் 'பத்தியைத் தூக்கிய பாலை' என வழங்கப்பட்டது. இது மாங்கேணிக் கண்மையிலுள்ளது.

திமிலர்களைத் துரத்திச்சென்ற குழுவினர் சந்தித்துக்கொண்ட இடம் சந்திவெளி எனவும், அவர்கள் இளைப்பாறிய இடம் வந்தாறுமூலை எனவும் அழைக்கப்பட்டது. முஸ்லிம்கள் முக்குவர்களுடன் இணைந்து போரிட்டதனால் அவர்கள் முன்னர் குடியேறத் தடுக்கப்பட்டிருந்த ஏறாவூரில் குடியேறி வாழ அனுமதிக்கப்பட்டனர்.

வாழைச்சேனையில் குடியேறிய முஸ்லிம்கள் பெரும்பாலும் காத்தான்குடியிலிருந்தே வந்தனர். ஆறுமுகப் பட்டங்கட்டியும் அவரது மனைவி வள்ளியம்மையும், மீரான்போடியாரும் அவரது மனைவி கதிசா உம்மாவும் ஒரே மாட்டு வண்டியில் காத்தான்குடியிலிருந்து வந்து இங்கு குடியேறினர் எனவும், இவர்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்தனர் எனவும் ஒரு கதை கூறப்படுகிறது.

இக்கதையிலுள்ள உண்மை எவ்வளவுக்கு ஆதாரமுடையது என்று தெரியாவிட்டாலும் இரு பகுதியினரும் ஏறக்குறைய சம காலத்திலேயே வாழைச்சேனைப் பகுதியில் குடியேறியிருக்கலாம் என நம்பலாம். இப்பகுதியில் நீண்ட காலமாகத் தமிழ், முஸ்லிம் மக்களிடையே நிலவும் ஒற்றுமையும், கொடுக்கல் வாங்கல் பிணைப்பும், தொழில் துறையில் ஒற்றுமையாகச் செயல்பட்டு வருவதும் இன்றும் தொடர்ந்து நிலவிவருவது அவதானிக்கத்தக்கது.

# வாழைச்சேனை முன்னோடிகள் பற்றிய குறிப்பு : ஒன்று

வாழைச்சேனை முன்னோடிகள்பற்றிய சரியான வரலாறு கிடைக்கவில்லை. பலதரப்பட்ட குடிகள்பற்றியும், அக்குடிகளுக்குத் தலைவர்களாக இருந்தவர்கள் பற்றியும் கூறப்படுகிறது.

பொதுவாகச் சமூகத்தில் வசதியும், வாய்த்துடுக்கும் உள்ளவர்கள் தலைவர்களாகவும், செல்வாக்குள்ளவர்களாகவும் உருவாகுவதுண்டு. அத்தகையவர்களின் தலைமையைக் கொண்டு குடிமரபினை ஆராய்தல் பொருத்தமானதாகப்படவில்லை. தலைவர்களாக இருந்தோர் மறைய அவர்களது பரம்பரையின் எழுச்சியும் மறைந்துவிடுகிறது. அதற்குப்பதிலாக சில குடிகள் மேலோங்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே, வாழைச்சேனையில் பல குடிமரபினர் பற்றிப் பேசப்பட்டபோதிலும், அக்குடிகளை அடையாளம் காட்டக்கூடிய விசேட தன்மைகள் எதையும் காணமுடியவில்லை. சிலவேளை பல குடியினர் ஒருவரோடொருவர் கலந்துவிட்டமை இதற்குக் காரணமாகலாம்.

குடிமரபுபற்றி தகவல்களைப் பெறமுடியாவிட்டாலும், இக்கிராமத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்த பெரியார்களைப்பற்றி அறிய முடிகின்றது.

பல குடியினர் வாழைச்சேனையில் வாழ்ந்தபோதிலும், அம்முப் போடியார் குடும்பம், வெள்ளையர் குடும்பம் ஆகிய இரு குடும்பங்களையும் சேர்ந்தோர், வாழைச்சேனை பெரிய பள்ளிவாசல், சந்தை முதலானவற்றை நிறுவுவதில் பெரும் பங்காற்றியுள்ளனர். அக்குடும்பத்தினர், தமது செல்வம், உழைப்பு முதலானவற்றை, வாழைச்சேனையின் வளர்ச்சிக்காக வழங்கியுள்ளனர் என்பதை மறுக்கமுடியாது. அவர்களுக்கு அக்காலத்தில் இருந்த செல்வநிலை, சமூக அந்தஸ்து என்பன இத்தகைய பங்களிப்பினை செய்வதற்கு உறுதுணையாக அமைந்திருக்கும் எனலாம்.

அவர்களின் வழிவந்த, அண்மைக்காலத் தலைவர் செ. அ. அறபிமுத்து மரைக்கார் என்றும் நினைவுகூரத்தக்க ஒருவராவர். அவர் வாழைச்சேனையின் இன்றைய வளர்ச்சிக்கு அத்திவாரமிட்டவர் ஆவார்.

செ. அ. அறபிமுத்து மரைக்கார் 'செ. அ,' என அவரின் சம காலத்தவர்களால் அன்பாக அழைக்கப்பட்டார்.

வாழைச்சேனைப் பள்ளிவாசல் நிருவாகம் ஒரு இக்கட்டான நிலைமையில் இருந்தபோது, அவர் நிருவாகத்தின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றார்.

அவரது மாமா முறையான முகம்மதுத்தம்பி மரைக்கார் என்பவர், பள்ளிவாசல் பரிபாலனத்தைச் சரியான வழியில் கொண்டு செல்ல முடியாது தத்தளித்தபோது, ஊர்ப்பிரமுகர்கள் கூடி, செ. அ. வை தலைமைப் பொறுப்பை ஏற்று நிருவாகத்தை நடத்தும்படி கேட்டனர்.

இவர் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டதும், பல துணிகரமான காரியங்களில் ஈடுபட்டு வெற்றியடைந்தார். இப்போதுள்ள பள்ளிவாசலுக்குச் சொந்தமான சந்தைக் கட்டிடத் தொகுதியை உருவாக்கினார். பரிபாலன சபையினர் எதிர்நோக்கியிருந்த நிதி நெருக்கடியை நிவர்த்திசெய்தார். பள்ளிவாசல் பரிபாலனத்திற்கு ஒரு நிரந்தரமான வருவாய்க்கு ஏற்பாடு செய்த பெருமை இவரைச் சார்ந்தது.

செ. அ. பள்ளிவாசல் நிருவாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டமைக்கான சூழ்நிலைபற்றி ஒரு சம்பவம் கூறப்படுகின்றது.

முகம்மதுதம்பி மரைக்கார் காலத்தில் பள்ளிவாசல் நிருவாகம் வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது.

பள்ளிவாசல் நிருவாகத்தின்கீழ் ஒரு சந்தை இருந்தது. இச்சந்தைக்கு கற்கட்டிடங்கள் எதுவும் இருக்கவில்லை. ஓலைக் குடிசைகளைக் கொண்ட கடைத்தொகுதியும், மீன், இறைச்சி, அரிசி விற்பனை செய்வதற்கான இடங்களுமிருந்தன. இவை பள்ளிவாசலுக்கு 'வக்பு' செய்யப்பட்ட காணியில் இருந்தபடியால் சிறிய வாடகை கிடைத்தது. இவ்வருவாயினைக் கொண்டு பள்ளிவாசலின் அன்றாடச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டன.

சந்தையென்ற காரணத்தால் அதற்காக அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டுமெனக் கூறப்பட்டது. செ. குமாரசாமி முதலியார் அக்காலத்தில் வாழைச்சேனைப் பிரதேசத்திற்கு வரி அறவிடுவதற்கு பொறுப்பான அதிகாரியாக இருந்தார். இவர் பள்ளிவாசல் சந்தைக்கு வரி அறவிடுவதற்கு முயற்சி செய்தும், வரிப்பணம் கிடைக்காத காரணத்தால், நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். நீதிமன்றம் நூற்றைம்பது ரூபா வரிப்பணம், பள்ளிவாசல் நிருவாகத்திடம் இருந்து அறவிடப்படல் வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியது.

இவ்வரிப்பணத்தைச் செலுத்தக்கூடிய நிதி நிலைமையில் பள்ளிவாசல் நிருவாகம் இருக்கவில்லை. தென்னிந்தியா, காயல்பட்டணத்திலிருந்து வந்து வாழைச்சேனையில் வியாபாரம் செய்த, செ. இ.

சுலைமாலெவ்வை என்பவர் இதற்கான பணம் நூற்றைம்பது ரூபாவை பள்ளிவாசலுக்குக் கடனாகக் கொடுத்து வரியினைக் கட்டுவித்தார்.

இக்காலகட்டத்திலேதான் செ. அ அறபிமுத்து மரைக்கார் நிருவாகத்தின் தலைவராக கடமையேற்றார்.

அப்போது அவர் வாகரையில் தேனீர்க்கடை வைத்து நடத்தி வந்தார். ஊர்ப்பிரமுகர்களும், காயல்பட்டன வர்த்தகர்களான செ. இ. சுலைமாலெவ்வை, வாக்கர் சாஹிபு ஆகியோரும் வாகரைக்குச் சென்று, அழைத்துவந்தனர். இவர்கள் பள்ளிவாசல் நிருவாகத்தின் தலைமைப் பதவியை செ. அ. ஏற்றுக்கொள்ள வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். இதனால் செ. அ. தலைவரானார்.

செ. அ. தலைமைப்பதவியை ஏற்றுக்கொண்டதும், நீதிமன்றம் பள்ளிவாசல் நிருவாகத்திடமிருந்து வரிப்பணம் அறவீடு செய்தமை தவறானது எனக் கண்டார். அப்பணத்தை மீளப் பெறுவதற்காக நீதிமன்றம் செல்லத் துணிவு கொண்டார். நீதிமன்றத்தில், சந்தை வரிப்பணம் பள்ளிவாசல் நிருவாக சபை கட்டத் தேவையில்லையென்பதை தக்க காரணங்காட்டி, மீளளிப்புச் செய்யுமாறு அப்பீல் விண்ணப்பம்செய்தார் பள்ளிவாசல் ஒரு பொது நிறுவனம் என்ற காரணத்தால் அவரது கோரிக்கையை ஏற்று பணத்தை மீளளிப்புச் செய்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

அத்துடன், வாழைச்சேனை ஜும்ஆப்பள்ளிவாசல் சந்தையிலிருந்து ஒரு மைல் சுற்றுவட்டாரத்தில் வேறு பொதுச்சந்தைகள் நிறுவப்படலாகாது எனவும் தீர்த்தது. இத்தீர்ப்பின் பிரதிகள் எதுவும் தற்போது கிடைக்கவில்லையென்பது பெரும் இழப்பாக உள்ளது.

இதன் பின்னர் சந்தை பள்ளிவாசலுக்கு அண்மையில் நிறுவப்பட்டது. ஓலைக் கொட்டில்களாகவும், களிமண் சுவர்களாகவும் இருந்த சந்தைக் கடைத்தொகுதி, செங்கற் கட்டிடங்களாகவும், ஓட்டுக் கூரையாகவும் மாற்றமடைந்தது. இன்று காணப்படும் கடைத் தொகுதிக் கட்டிடங்கள் செ. அ. வின் கற்பனையில் எழுந்தவையே.

செ. அ. அறபிமுத்து மரைக்கார் நடுத்தர உயரமுடையவர். மிகுந்த நிதானமும், புத்திக்கூர்மையுமுடையவர். இவரது ஆளுமை இவர் காலத்து மக்களால் பெரிதும் கவரப்பட்டிருந்தது.

செ. அ. பள்ளிவாசல் நிருவாகத்தின் தலைவராக மட்டுமன்றி கோறளைப்பற்று கிராமச் சபையின் அங்கத்தவராகவும் இருந்துள்ளார். சிறிது காலம் சேர்மன் ஆகவும் கடமையாற்றியுள்ளார்.

செ. அ. வுக்கு, மு. இ. சுலைமாலெவ்வை, வாக்கர் சாஹிபு ஆகிய இருவரும் உதவியாளர்களாகவும், ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர். இவ்விருவரும் வாழைச்சேனையில் பெரும் வர்த்தகர்களாக இருந்தவர்களாவர்.

இவரை வாகரையிலிருந்து அழைத்துவந்த உ. லெ. முகம்மது இபுறாம் ஹாஜியார், பக்கீர் மரைக்கார், அசனார் மரைக்கார், அகமது லெவ்வை மரைக்கார், சேகு விதானை ஆகியோர் அவருடன் இணைந்து செயல்பட்டனர்.

உ. லெ. முகம்மது இபுறாகீம் ஹாஜியார், பொருளாளராக இருந்து நீண்டகாலம் சேவை செய்தார். இவர் வாழைச்சேனை தைக்காப்பள்ளிவாசல் உருவாகுவதற்கு மூலகாரணகர்த்தாவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலப்போக்கில் சபையில் இருந்த பலர் விலகிப்போக, செ.அ. வும், முகம்மது இபுறாகீம் ஹாஜியாரும் சேர்ந்து செயல்படலாயினர்.

செ. அ. நீண்டகாலம் தலைவராக இருந்து, நிருவாகம் நடத்தியமையால், அவர்மீது சிலர் குற்றம் கண்டுபிடிக்கத் தொடங்கினர். அவர் தன்னிச்சையாகச் செயல்படுகிறார் என்றும், சரியான முறையில் கணக்குக் காட்டவில்லையென்றும் முணுமுணுப்புக்கள் ஏற்படலாயின. பல புதிய பிரமுகர்கள் பள்ளிவாசல் நிருவாகப் பொறுப்பை ஏற்று நடத்த ஆசைப்பட்டனர்.

இவர்களின் கோரிக்கைக்கு செ. அ. விட்டுக்கொடுக்கவேண்டியேற்பட்டது.

செ. அ. மரணிக்கும் தறுவாயில், அவருக்குச் சொந்தமாக சொத்துக்கள் எதுவும் இருக்கவில்லை என்பது தெரியவருகிறது.

அவரது மரணச் செலவு, அவரது சொந்த உபயோகத்துக்கு இருந்த, சைக்கிள், றேடியோ, துவக்கு என்பவற்றை விற்பனை செய்து ஈடுசெய்யப்பட்டது.

இத்தகைய தன்னலமற்ற, தியாகசிந்தனையுள்ள தலைவர்களது சேவையினை சமூகம் என்றென்றும் நினைவுகூருவது அவசியமாகும்.

செ. அ. அவின் தலைமையை விரும்பாத அன்றைய இளைய தலைமுறையினரின் எழுச்சி, வாழைச்சேனையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

செ. அ. அ. அவர்கள் சந்தைக் கட்டிடத் தொகுதியைக் கட்டி முடித்தார். பள்ளிவாசல் பரிபாலனத்திற்குத் தேவையான நிதி

ஒழுங்குகளைச் செய்தார். ஆனால் பள்ளிவாசல் கட்டிடத்தை விஸ் தரிப்பதற்கு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. பள்ளிவாசல் கட்டிடம் நூற்றைப்பது ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாக இருந்தது. கிராமத்தில் ஏற்பட்ட சனப் பெருக்கத்துக்கு ஏற்ப பெருப்பிக்கப்படவில்லை. ஜும்ஆ நாளில் இடநெருக்கடியைக் காணக்கூடியதாக இருந்தது.

அதனால் பள்ளிவாசல் புனருத்தாரணம் செய்யப்படுவது அவசியம் எனப் பலராலும் உணரப்பட்டது. வாழைச்சேனையைப் பொறுத்தவரையில் அன்றையப் பொருளாதா நிலை பள்ளிவாசல் கட்டிடத்தை உடைத்துப் புதிதாக அமைப்பதற்கு ஏதுவானதாக இருக்கவில்லை என்பது செ. அ. அ. கருத்தாக இருந்திருக்கும். ஆயினும் புதிதாகப் பணம் படைத்த செல்வந்தர்கள், செ. அ. அ. விட்டுக்கொடுத்தால் தாம் பொறுப்பேற்றுப் புனருத்தாரண வேலைகளில் ஈடுபடமுடியும் என நம்பிக்கை தெரிவித்தனர்.

செ. அ. அ. பிடிவாதமாக இருந்தார். அதன் காரணமாக அவரது தலைமைப் பதவியைப் பகிஷ்கரிப்பதற்காக, ஊர்ப் பிரமுகர்கள் ஒன்றிணைந்து ஜும்ஆத் தொழுகையை, வாழைச்சேனை முகைதீன் தைக்காப் பள்ளிவாசலில் சிலகாலம் நடத்தினர். ஊர் இரண்டு பிரிவுகளாக மாறும் நிலை தோன்றியபோது, செ. அ. அ. விட்டுக்கொடுக்க இளையவர்களின் போராட்டம் வெற்றிபெற்றது.

செ. அ. அ. அவர்களுக்குப் பிறகு நிருவாகப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டவர்கள் வாழைச்சேனை முகைதீன் ஜும்ஆம்பள்ளிவாசல் கட்டிடத்தைப் புனருத்தாரணம் செய்து இடவசதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டனர் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

# வாழைச்சேனை முன்னோடிகள்பற்றிய குறிப்பு : இரண்டு

வாழைச்சேனை முன்னோடிகள்பற்றிய இந்தக் குறிப்பினைப் பகுதி இரண்டு எனக் குறிப்பிடுவதற்குக் காரணம், முந்தையத் தலைமுறையினருக்கும், பின்னர் வந்த தலைமுறையினருக்குமுள்ள இடைவெளியைக் காட்டுவதற்காகவே. பின்னர் வந்தவர்களும் தம்மாலான சேவையைத் தமது பிறந்தகத்திற்காக ஆற்றியுள்ளனர் என்பதை மறத்தலாகாது.

செ. அ. அ. அவர்களுக்குப் பிறகு, இதுவரை பலர் வாழைச்சேனைப் பள்ளிவாசல் நிருவாகப் பொறுப்பையேற்றுத் தமது கடமையைச் செவ்வனே ஆற்றியுள்ளனர். ஒவ்வொருவரினதும் ஆளுமைக்கும் திறமைக்கும் ஏற்ப, அவர்களது பணிகள் இருந்தன.

தலைமைப் பதவியேற்ற சிலர் தமது தகுதியின்மை காரணமாக விமர்சிக்கப்பட்டனர். அவர்கள் பதவியிறக்கம் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சமூகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்பவர்களுக்குப் பொறுப்புணர்ச்சியும், கடமைப்பாடும், மற்றவர்களை மதித்து, கண்ணியப்படுத்தி நடக்கவேண்டிய நிலையுமுண்டு. சிலர் அத்தகைய உணர்வுகளின்றிச் செயல்படும்போது, பொதுமக்களின் வெறுப்பைச் சம்பாதிக்கின்றனர். வசதி படைத்த சிலர், எல்லாம் தெரிந்த தலைவர்களாக மாறிவிடுவதுமுண்டு. இது தலைமைப் பதவிக்கு ஆரோக்கியம் அளிக்காது என்பதை நடைமுறையில் அவதானிக்கப்பட்டுள்ளது. தலைமைப் பதவியை நாடிவருவோர், அவதானம், நுண்ணறிவு, நிதான புத்தி, சுயநலமின்மை, அனுசரணை ஆகிய பண்புகளுடையவர்களாக இருக்கவேண்டும்.

செ. அ. அவர்களின் பின் தலைமைப் பொறுப்பு பலருக்குக் கைமாறி வந்துள்ளது.

அவரின் தம்பி முறையினரான, சின்னத்தம்பிப் போடியார் மகன், முகம்மது இபுறாகீம், சதக்குலெவ்வை ஹாஜியார், தா. லெப்பைத்தம்பி ஹாஜியார், அ. லெ. அப்துல்காதர் ஜே பி., எம்.எச்.எம். முகைதீன், எம். ஐ. அசனார் ஹாஜியார், எம். எல். அச்சிமுகம்மது ஹாஜியார் ஆகியோர் இதுவரை தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்தினர்.

சதக்குலெவ்வை ஹாஜியார் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்திய காலத்திலேயே, பள்ளிவாசல் புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சதக்குலெவ்வை ஹாஜியார் அமைதியான மனிதர். அவரது தலைமையின்கீழ் பலர் செயல்பட்டு, பள்ளிவாசல் வேலைகள் துரித மாக நடைபெற ஒத்துழைத்தனர்.

தா. லெப்பைத்தம்பி ஹாஜியார், சதக்குலெவ்வை ஹாஜியா ருக்குப் பின்னர் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டார். அவர் இருபது வருட காலமாக நிருவாக சபையில் இடம்பெற்றுவருகிறார். பல சந்தர்ப்பங்களில் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். அவர் தமது வியாபாரத்தில் கூடுதலான கவனத்தைச் செலுத்துவதனால், சில சந்தர்ப்பங்களில் பள்ளிவாசல் தலைமைக்குப் பொருத்தமற்றவர் என விமர்சிக்கப்படுகிறார். எனினும் தா. லெப்பைத்தம்பி ஹாஜி யாரின் கடந்தகாலச் சேவையினைக் குறைத்து மதிப்பீடு செய்யமுடி யாது. இன்றும் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடிய தகைமை அவருக்குண்டு. ஆனால் அவர் சமூகத்திற்காகச் சற்றுத் தியாகம் செய்யவேண்டும் என்ற மனோநிலையை உருவாக்கிக்கொள்ளவேண் டும். இன்றைய இளைய தலைமுறையினருக்கும், பழைய தலைமுறை யினருக்கும் இடையே நடுநிலை வகிக்கக்கூடியவராக அவர் காணப் படுகிறார்.

அ. லெ. அப்துல்காதர் ஹாஜியார் ஜே.பி. பதினைந்து வரு டங்களுக்கு மேலாக சபையில் இருந்துள்ளார். குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் தலைமைப் பதவியை ஏற்றார். அரசியல்மூலம் தலை மைப் பதவியை ஏற்ற காரணத்தால், பலரது வெறுப்பைச் சம்பா திக்கவேண்டியேற்பட்டது. இன்று அவரிடம் காணப்படும் தன்மைகள் தலைமைப் பதவிக்கு அவர் பொருந்தியவராக இருப்பதைக் காட்டு கிறது.

இவர்களைப்போன்ற முதியவர்களின் ஆலோசனைகளையும், தலைமையினையும் இன்றைய இளைஞர்கள் பெற்றுக்கொள்ளவேண் டியது அவசியம்.

எம். எச். எம். முகைதீன் ஜே.பி. அரசியலின்மூலம் எழுச்சி பெற்றவர். இவர் பள்ளிவாசல் தலைமையை ஏற்றபோது முக்கிய மான திருத்த வேலைகள் பள்ளிவாசலில் மேற்கொள்ளப்பட்டன.

தலைமைத்துவத்துக்குரிய சகல பண்புகளும் இவருக்குண்டு. இவர் இன்னும் வளர்ச்சியடையவேண்டும். இளைய தலைமுறையின ரின் தலைமைக்குரியவராக அவர் வளர இருந்தார். சரியான வழி காட்டலின்றி இவர் செயல்படுவதனால் சில நேரத்தில் கடுமையான விமர்சனத்திற்குட்படுகிறார்.

மு. இ. அசனார் ஹாஜியார் இளையவராக இருந்தபோதிலும் தலைமைத்துவத்திற்குப் பொருத்தமானவர்; அமைதியாக விடயங்களை ஆராயக்கூடியவர். இவரும் சில மாதங்கள் தலைமைப் பதவியை ஏற்று நடத்தினார். விமர்சனங்களுக்குப் பயப்படுபவர்.

மு. லெ. அச்சி முகம்மது ஹாஜியார் கடந்த இரு வருடங்களாக நிருவாக சபையின் தலைமைப் பதவியை ஏற்றுள்ளார். இவர் தலைமையிலுள்ள சபை இரு பிரிவாகிவிட்டது. வக்பு சபையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. தெரிவு முறையற்றது எனத் தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது. மு. இ. அச்சி முகம்மது ஹாஜியார், சந்தையில் திருத்த வேலைகளை மேற்கொண்டார்.

இவரை எதிர்த்து, வக்பு சபையில் முறையிட்டவர்களைக் கொண்ட விசேட நிருவாக சபையொன்று நிறுவப்பட்டுள்ளது. எம். எச். எம். முகைதீன் ஜே.பி. தலைமையில் இச்சபை இயங்குகிறது.

தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இவர்களைத் தவிர, நிருவாக சபைகளில் பலர் இடம்பெற்றனர்.

மு. அ. முஸ்தபாலெவ்வை ஹாஜியார் (காஸி) ஜே பி., மு. கா. முஸ்தபாலெவ்வை ஹாஜியார்' அ. யாசின்பாவா ஹாஜியார், எம். எஸ். மீராசாஹிபு, எஸ். எம். மீராசாஹிபு, எம். ஐ. அப்துல்லாஹ் ஹாஜியார் ஜே.பி., எம். எஸ். ஏ. காதர், எம். ஐ. அப்துல்கபூர் (மனேஜர்), எஸ். எ. கபூர் மௌலவி, எம். ஐ. முகம்மதுத்தம்பி ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் பள்ளிவாசல் கட்டிட வேலைகளில் கணிசமான பங்களிப்பினைச் செய்துள்ளனர்.

எம். எஸ். மீராசாஹிபு, எஸ். எம். மீராசாஹிபு, எம். ஐ. முகம்மதுதம்பி, எம். ஐ. அப்துல்லாஹ் ஹாஜியார், எம். எஸ். ஏ. காதர், வை. அகமது, எம். ஐ. மகுமூது, ஏ. எல். மீராசாஹிபு, எம். எஸ். முனாஸ் ஆகியோர் அவ்வப்போது உருவாக்கப்பட்ட சபைகளின் செயலாளர்களாகக் கடமையாற்றி, தத்தமது தலைவர்களுக்கு உறுதுணையாக இருந்து பணியாற்றியுள்ளனர்.

இ. லெ. முஸ்தபாலெவ்வை ஹாஜியார் கட்டிடக் குழுவுக்கு தனாதிகாரியாக இருந்து பெரும் சேவையாற்றியுள்ளார். இவர் வாழைச்சேனையின் முதல் காதி நீதவானாகவும், கோறளை மத்திய கிராமச் சபையின் சேர்மனாகவும், கமநல சேவை நிலையத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

மு. கா. முஸ்தபாலெவ்வை ஹாஜியார், மு. இ. மு. சுலைமான் மௌலவி ஆகிய இருவரும் நனாதிகாரிகளாகக் கடமையாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

உ. லெ. அகமதுலெவ்வை, மீ. அகமதுலெவ்வை, ஆ. பா. ஹயாத்துமுகம்மது, சு. லெ. அச்சிமுகம்மது, எஸ். எ. கமர்தீன், எம். ஏ. சி. எம். ஜுனைத் மௌலவி, கே. சாஹுல்ஹமீது, எம். எஸ். உதுமாலெவ்வை ஹாஜியார், எம். எஸ். புரீத் மௌலவி, எம். ஐ. ஆதம்பாவா மௌலவி, ஏ. றம்ளார், சின்னத்தம்பி, எஸ். எம். மஹ்றூப், எம். ரி. எம். யூசுப் ஹாஜியார், பி. எம். சரீப் ஹாஜியார், எஸ். ஏ. சக்காப் மௌலவி ஆகியோர் கடந்த காலங்களில் நிருவாக சபை அங்கத்தினர்களாக இருந்து கடமையாற்றியுள்ளனர்.

# வாழைச்சேனை பள்ளிவாசல்கள், மத்ரஸாக்கள், பாடசாலைகள்

## பள்ளிவாசல்கள்

(வாழைச்சேனையில் தற்போது ஆறு பள்ளிவாசல்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல்,
முகைதீன் தைக்கா, (இப்பள்ளிவாசல் 'மஸ்ஜிதுல் ஹைறாத்' எனும் பெயரில் புனருத்தாரணம் செய்யப்படுகிறது.)
பதுறிய்யா தைக்கா,
மஸ்ஜிதுல் அக்பர்,
மஸ்ஜிதுல் பலாஹ்,
மஸ்ஜிதுல் சாதுலிய்யா.)

அத்துடன் நான்காம் வட்டாரத்தில் ஆற்றங்கரையில், பள்ளிவாசல் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது. இவற்றுள் முகைதீன் ஜும்ஆ பள்ளிவாசல் பிரபல்யமானது, பழைமையானது. இப்பள்ளிவாசல் நூற்றைம்பது வருடகால வரலாற்றைக் கொண்டது.

இப்பள்ளிவாசல் தற்போதுள்ள இடத்தில் அமைவதற்கு முன், வாழைச்சேனை நான்காம் வட்டாரத்தில் பள்ளிவாசல்துறை என்ற ஓரிடத்தில் அமைந்திருந்தது.

வாழைச்சேனையில் முடியேறிய முஸ்லிம்கள் முதலில் ஆற்றோரங்களிலேயே தமது குடியிருப்புக்களை நிறுவினர் என்பதை முன்னர் குறிப்பிட்டுள்ளோம். அதன் காரணமாகவே, ஆரம்பப்பள்ளிவாசலும், அங்கு அமைந்தது.

தொழில் வசதி கருதியும், பயிர்ச்செய்கைக்கு உகந்த நிலம் ஆற்றோரத்தில் கிடைத்ததாலும், இக்குடியிருப்புக்கள் அங்கு நிறுவப்பட்டன. குடியிருந்த மக்களின் தொகையும் சிறு அளவே இருந்ததால், தாம் குடியிருந்த இடத்துக்கு அண்மையிலேலே பள்ளிவாசலை நிறுவிக்கொண்டனர். பள்ளிவாசல் ஆற்றங்கரையில் அமைந்தபடியால் அவ்விடம் பள்ளிவாசல்துறை என அழைக்கப்பட்டது. இப்போது அவ்விடத்தில் பள்ளிவாாசல் அமைந்திருதற்கான எவ்வித அடையாளமும் இல்லை. இங்கு 'மையத்து' அடக்கம் செய்யப்பட்டது என்பதை பலர் அறிவார்கள். மிகவும் வயது முதிர்ந்தவர்கள், இங்கு பள்ளிவாசல் ஒன்று இருந்ததை தாம் கேள்விப்பட்டதாகக் கூறுகின்றனர்.

பள்ளிவாசல்துறை என அடையாளம் காட்டப்படும் இடம், இன்றைய மீன்பிடித்துறைமுகக் கட்டிடம் அமைந்துள்ள 'வங்களாத் துறையிலிருந்து மேற்குப்புறமாக சுமார் ஐந்நூறு யார்த் தூரத்தில் ஆற்றோரமாக அமைந்திருந்தது எனக் குறிப்புச் சொல்கின்றனர்.

எம். ஐ. அசனார் ஹாஜியார் (இஸ்மாயில் முதலாளி) அவர்களின் ஐஸ் வாடிக்கு கிழக்கே கல்குடா மட்டக்களப்புப் பாதைக்கும் இடையே இப்பள்ளிவாசல் அமைந்த இடம் இருக்கலாம் எனக் கருதப் படுகிறது.

பள்ளிவாசல் துறையில் அமைந்திருந்த பள்ளிவாசல் ஓலைக் கொட்டிலாகவே இருந்தது. இப்பள்ளிவாசலில் ஐங்காலத் தொழுகைகள் இடம்பெற்றன. ஜும்ஆத் தொழுகையும் இடம்பெற்றிருக்கக்கூடும். 'மையித்' அடக்கத்தலமும் இங்கு இருந்தது. ஆற்றோரத்தில் மையத் அடக்கம் செய்யப்பட்டதனால், ஆற்றுவெள்ளம் பெருக்கெடுக்கும் காலத்தில் மையித்துகள் வெளிப்பட்டன எனக் கூறினர். அதனால் மையத்து அடக்குவதற்கான புதிய இடம் அவசியப்பட்டது. அதற்காக சன நெருக்கடியற்ற இடத்தை நாடினர்.

அக்காலத்தில் பள்ளிவாசல்களுக்கு அண்மையிலேயே மையவாடிகளையும் அமைத்துக்கொண்டதனால், புதிய இடத்தில் பள்ளிவாசலும் மையவாடியும் ஒன்று சேரவேண்டியிருந்தது.

சனத்தொகைப் பெருக்கமும் புதிய இடத்தில் பள்ளிவாசல் ஒன்று அமைக்கவேண்டியதன் அவசியத்தை உணர்த்தியிருக்கும்.

தற்போது பெரிய பள்ளிவாசல் என அழைக்கப்படும் ஜும்ஆப் பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் புதிய பள்ளிவாசலை அமைத்தனர்.

ஆரம்பத்தில் களிமண் சுவரும் ஓலைக் கூரையும் கொண்ட ஒரு கொட்டிலாக நிர்மாணிக்கப்பட்டது. பின்னர் சுண்ணங்கற்களைக் கொண்டு சுவர் எழுப்பினர். அண்மையிலிருந்த காடுகளில் பெரிய மரங்களை வெட்டிக் கொண்டுவந்து, தூண்களையும் விட்டங்களையும் அமைத்து, நாட்டு ஓடுகளினால் கூரையும் வேய்ந்தனர்.

இக்கட்டிடம் சுமார் ஐந்நூறுபேர் நின்று தொழக்கூடியதாக இருந்தது. இரு பக்கங்களிலும் விறாந்தைகளிருந்தன. கிழக்குப் புறமாக 'ஹவ்ழு' இருந்தது. அவற்கு முன்புறமாகக் கிணறு இருந்தது.

பொதுவாகக் கிழக்கு மாகாணத்தில் அக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசல்கள் அனைத்தும் ஒரே மாதிரியான அமைப்பிலேயே கட்டப்பட்டிருந்தன. உள் மண்டபத்தில் பெரிய மரத் தூண்கள் தாங்கிக்கொண்டிருக்க, கட்டியான மர உத்திரங்களுக்கு

மேலே கூரை அமைக்கப்பட்டது. இவ்வாறான கட்டிடங்கள் இன்று அழிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருவதைக் காண் கின்றோம்.

இப்பள்ளிவாசல் கட்டிடமும் 1971-5-7ந் திகதி புனர்நிர்மாணம் செய்வதற்காக உடைக்கப்பட்டது. இன்று காணப்படும் கட்டிடத் திற்கான கல்நாட்டு வைபவமும் அன்று நடைபெற்றது.

1971ம் ஆண்டில் இக்கட்டிடத்திற்கான செலவின மதிப்பீடு ஒன்றரை இலட்சம் ரூபாவாகும். கட்டிடத்தின் பெரும்பகுதி வேலை கள் ஒருசில வருடங்களில் பூர்த்தியான போதிலும், மனாரா, கிழக்குப் புறக்கூரை என்பன பூரணமாகவில்லை. அடிக்கடி திருத்த வேலை களும் மேற்கொள்ளப்பட்டன. முன்னர் திட்டமிட்ட வேலைகளுக்கு மேலாக பல இலட்சம் ரூபாய்கள் செலவிடப்பட்டு பல புதிய வேலை கள் செய்யப்பட்டன. ஆயினும் கட்டிடத்தில் கடந்த இருபது வருட காலமாக குறைவு இருந்தே வருகின்றது.

திருத்த வேலைகளை மேற்கொண்டோர், தத்தமது மனப் போக்கின்படி வேலைகளை மேற்கொண்டனர். ஆரம்பத்தில் கட்டிட வேலைகளில் முன்னோடிகளாகப் பங்குபற்றியோர், பின்னர் வந்தவர் களுக்கு வழிகாட்டவில்லை. ஆரம்பந்தில் உருவாகிய படத்தைத்தானும் கொடுக்கவில்லை. அதனால் சில பகுதிகள் உடைக்கப்பட்டன. படத் திலில்லாத சில வேலைகள் புதிதாக உருவாக்கப்பட்டன.

பொறியியலாளர், தொழில்நுட்ப உதவியாளர் எவருமே இது வரை இக்கட்டிட வேலைகளை மேற்பார்வை செய்யவில்லை. பண உதவி செய்தோர் தமக்கு எது விருப்பமோ அவ்வேலைகளைச் செய் தனர், இப்போதும் செய்துகொண்டு வருகின்றனர்.

## முஹைதீன் தைக்கா

முஹைதீன் தைக்கா சுமார் ஐம்பது வருட காலப் பழமைவாய்ந் தது. உ. லெ. முகம்மது இபுறாகீம் ஹாஜியார் போன்றோர் இத் தைக்காவை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தனர். இங்குதான் மையவாடியும் உண்டு.

தைக்காப் பள்ளிவாசல் சிறிய கட்டிடமாகவே முதலில் அமைக் கப்பட்டது. சனப்பெருக்கம் காரணமாக இடநெருக்கடி ஏற்பட்ட போது இரு பக்கங்களிலும் விறாந்தைகள் உருவாக்கப்பட்டன.

தற்போது இப்பள்ளிவாசலைப் பெருப்பிப்பதற்கான முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 'மஸ்ஜிதுல் ஹைறாத்' எனப் பெயர் மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது. 29-8-92ந் திகதி 'கிப்லா' திசை கணக்கிடப்பட்டது.

மஸ்ஜிதுல் ஹைறாத் வேலைகளைச் செய்வதற்கு ஊர்ப்பிர முகர்கள் கொண்ட ஒரு குழு நிறுவப்பட்டுள்ளது. மௌலவி எம்.பி. ஏ. ஏ. முஸ்தபா காதி நீதிபதி அவர்களின் தலைமையில், எம். ஐ. அசனார் ஹாஜியார், முன்னாள் மேலதிக உதவி அரச அதிபர் எம். ஹசன், எம். எஸ். மீராசாஹிபு, எஸ். எம். மீராசாஹிபு, எம். ஏ. சி. எம். புகாரி மௌலவி, எம். எல். அச்சிமுகம்மது. கே. சாஹுல் ஹமீது, எம். ஐ. எஸ். முகம்மது மௌலவி, எஸ். எல். சரீப் ஹாஜியார், எம். ரி. யூசுப் ஹாஜியார், எம். ஐ. மஃறூப் ஆசிரியர், கட்டிடக் குழுவில் இடம்பெறுகின்றனர். இவர்களில் சிலர் பெரிய பள்ளிவாசல் புனர் நிர்மாணக் குழுவில் ஆரம்ப கால அங்கத்தவர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'மஸ்ஜிதுல் ஹைறாத்' கட்டிடத்திற்கான முழு உதவிகளும், வாழைச்சேனை மீன்பிடியாளர்களினாலேயே வழங்கப்படுகிறது. மீன் பிடித் தொழிலில் ஈடுபடுவோர் இதற்கான பணத்தை தமது உழைப் பின்மூலம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளனர். சில பணம் படைத்த செல்வந்தர்களும் தமது கணிசமான பங்களிப்பினைச் செய் வதற்கு முன்வந்துள்ளனர்.

பல இலட்ச ரூபாச் செலவில் பிரமாண்டமாக அமைக்கப்பட இருக்கும் இப்பள்ளிவாசல் வாழைச்சேனை மக்களின் எதிர்காலத் தேவையைப் பூர்த்திசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரை குறையாக இல்லாமல் பூரணத்துவமுடைய ஒரு கட்டிடமாக உருவாக வேண்டும் எனப் பிரார்த்திப்போமாக. இக்கட்டிட முயற்சியில் ஈடு படுவோர் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட இறைவனருள் கிட்டுவதாக. புதிய பள்ளிவாசலின் முகப்புத் தோற்றமே இந்நூலின் முகப்பினை அலங்கரிக்கிறது.

பதுறிய்யா தைக்கா

காட்டுப்பள்ளி என முன்னர் இத்தைக்கா அழைக்கப்பட்டது. ஒழுங்கான முறையில் இத்தைக்கா பரிபாலிக்கப்படாததால் சிறிது காலம் தூர்ந்து காணப்பட்டது. மர்ஹூம் அகமதுலெவ்வை மரைக் கார் (கோழிக்கடைக்காரன்) அவர்களின் முயற்சியினால் இத்தைக்கா உயிர் பெற்றது. இப்போது இங்கு தொழுவோர் தொகை கூடியுள்ள தால், இதனை பெரிதாக நிர்மாணிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள் ளப்படுகின்றன. எம். ஐ. சலீம்கான், எம். ஐ. மகுமூது, ஏ. பி. றம்ளார், சின்னத்தம்பி ஆகியோர் இத்தைக்காப்பள்ளிவாசல் கட்டிட வேலைகளில் மும்முரமாக உழைத்துவருகின்றனர். சேகு இபுறாகீம் முகம்மது கபீர் இப்பள்ளிவாசலின் வளர்ச்சியில் கண்ணாக இருக்கிறார்.

**மஸ்ஜிதுன் நூரிய்யா (சாதுரிய்யா தைக்கா)**

இப்பள்ளிவாசல் சாதுலிய்யாத் தரீக்காவின் ஸாலியாவாக 1980ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இப்பள்ளிவாசல் கட்டிடத்திற்கான நிதியை சாதுரிய்யா தரீக்கா சேய்ஹு, செய்ஹுல் பாஷி அவர்கள் வழங்கினார்கள். தா. லெப்பைதம்பி ஹாஜியார் முன்னின்று இதற்கான கட்டிடத்தை நிர்மாணித்தார். யூ. எஸ். தாவூத் இப்பள்ளிவாசலின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறார். இவர் சாதுலிய்யா தரீக்கா வளர்ச்சிக்குப் பாடுபட்டுழைப்பது பாராட்டத் தக்கது.

**மஸ்ஜிதுல் அக்பர்**

வாழைச்சேனை – ஓட்டமாவடி எல்லை வீதியில் அமைந்துள்ள இப்பள்ளிவாசல் இவ்வாண்டு (1992) ஆரம்பிக்கப்பட்டு குறுகிய காலத்துக்குள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இப்பள்ளிவாசல் அமைந்துள்ள பிரதேசத்தைச் சுற்றியுள்ள இடங்களில் வசிக்கும் மக்களின் பெருமுயற்சியால் இப்பள்ளிவாசல் உருவாக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்களின் நீண்ட காலத் தேவையொன்று நிறைவு செய்யப் பட்டுள்ளது.

**ஆற்றங்கரைப் பள்ளிவாசல்**

வாழைச்சேனை நான்காம் வட்டாரத்தில். கே. சாஹுல் ஹமீது ஹாஜியார், எஸ். எல். சரீப் ஹாஜியார் ஆகியோரின் பெருமுயற்சியினால் இப்பள்ளிவாசல் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பள்ளிவாசல் கட்டிமுடிக்கப்பட்டால் மிகவும் பயனுள்ளதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மஸ்ஜிதுல் பலாஹ்**

எ. எம். அப்துல் காதர் ஹாஜியார் ஜே. பி, எம். எஸ். ஏ. காதர் ஆகியோரின் முயற்சியினால் இப்பள்ளிவாசல் 1990ல் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

## மத்ரஸாக்கள்

வாழைச்சேனையில் குர்ஆன் பாடசாலைகள் - மத்ரஸாக்கள் பல ஆரம்ப காலம் தொடக்கம் நடைபெற்று வருகின்றன. தனிப்பட்ட உலமாக்களும் பிரமுகர்களும் குர்ஆன் மத்ரஸாக்களை நடத்தி வருகின்றனர்.

சின்னப்போடியார் மகன் ஆலிம் முகம்மது இஸ்மாயில் என்பவர் ஒரு குர்ஆன் மதரஸாவை நடத்தினார். அவரிடத்தில் பலர் குர்ஆனைக் கற்றுக்கொண்டனர்.

பொது நூலகம்
... மேற்கு பிரதேச சபை

மர்ஹூம் மகுமூது ஆலிம் அவர்களும் குர்ஆன் பாடசாலை யொன்று நடத்தினார். அவரிடத்தில் பல மாணவர்கள் மார்க்கக் கல்வியைப் பெற்றனர்.

ஆதம்லெவ்வை விதானையார் ஒரு மத்ரஷாவை சில காலம் நடத்தினார். இன்னும் சில தனிப்பட்டவர்கள் குர்ஆன் ஓதிக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகத் தெரிகின்றது. 'மத்ரஸதுல் சலாமிய்யா' என்னும் மத்ரஸா மர்ஹூம் சேகு இஸ்மாயில் போடியார் ஹாஜியார் அவர்களால் நன்கொடையாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட கட்டிடத்தில் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது.

எஸ். ஏ. மீராசாஹிபு மத்ரஸதுல் முகம்மதிய்யாவை ஏறக்குறைய இருபத்தைந்து வருட காலமாக நடத்தி வருகிறார். ஆதம் பாவா அவர்களும் தனிப்பட்ட குர்ஆன் பாடசாலையொன்றை மிக நீண்ட காலமாக நடத்திவருகிறார்.

இம்தாதூல் உலூம் எனும் மத்ரஸாவின் தலைவராக எம்.எஸ். முகம்மது மௌலவி இருக்கிறார். எம். எஸ். பரீத் மௌலவி இதன் போதனாசிரியராக கடமையாற்றுகிறார்.

இதுதவிர, அறபுக் கல்வி, மார்க்கப்போதனை, குர்ஆன், மனன மத்ரஸா எனப் பல கல்லூரிகள் இயங்கிவந்தன. எம். எஸ். மீராசாஹிபு அவர்களின் பெரும் முயற்சியினால் மத்ரஸதுல் தீனிய்யா பல வருடங்கள் இயங்கிவந்து அக்கல்லூரியில் மார்க்கக்கல்வி பெற்றோர் உலமாக்களாக வெளியேறியுள்ளனர். இக்கல்லூரி தொடர்ந்து இயங்கிவந்திருந்தால், இன்று பெரும் வளர்ச்சி கண்ட ஒரு கலாசாலையாகத் திகழ்ந்திருக்கும்.

ஹில்லூரிய்யா அரபுக்கல்லூரி என்ற பெயரில் சேகு இபுறாகீம் முகம்மது கபீர் ஒரு கல்லூரியைப் பதிவுசெய்து நடத்தி வருவதாக கூறப்படுகிறது. சில மாணவர் இக்கல்லூரியில் ஆரம்பப் பாடங்களைக் கற்ற பின்னர் வேறு இடங்களுக்கு அனுப்பப்பட்டு கல்வியை தொடர்கின்றனர். இக்கல்லூரி சட்டப்படி இயங்குவதாகக் காட்டப்படுவதால் வேறு ஒரு அறபுக்கல்லூரியை வாழைச்சேனையில் பதிவுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஜாமியதுல் நஹ்ஜதுல் இஸ்லாம் குர்ஆன் மனனக் கல்லூரி 1990-6-6ந் திகதி ஆரமபிக்கப்பட்டு ஹாபிஸ்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இக்கல்லூரியை பதிவுசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இக்கல்லூரிக்கான காணி, கட்டிடங்களை எஸ். எ. கபூர் மௌலவி வழங்கியுள்ளார். எம். எல். அச்சி முகம்மது ஹாஜியார், இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகிறார். இவருடன்



1357
Class :
No. :

இணைந்து, எம். ஐ. எஸ். முகம்மது மௌலவி, எம். ஏ. சி. எம். புகாரி மௌலவி, யூ. அகமத் ஆசிரியர் ஆகியோர் செயல்படுகின் றனர். மிக அண்மைக்காலத்தில் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டாலும் நன்கு வளர்ச்சி கண்டுள்ளமைக்கு இவர்களின் அயராத உழைப்பே காரணம் எனலாம்.

## பாடசாலைகள் :

அந்நூர் மகா வித்தியாலயம்,

பிறைந்துறைச்சேனை அ. மு. க. வித்தியாலயம்,

பிறைந்துறைச்சேனை தெற்கு அஸ்ஸாதுலிய்யா வித்தியாலயம் என்பன வாழைச்சேனைப் பகுதியில் அமைந்துள்ள பாடசாலைக ளாகும். இப்பாடசாலைகளுள் அந்நூர் மகா வித்தியாலயமே பழமை யானது. அந்நூர் மகா வித்தியாலயம் ஆரம்பத்தில் ஆண் பாட சாலையென்றும், பெண் பாடசாலையென்றும் தனித்தனியே இயங்கி வந்தது. இப்பகுதிப் பெற்றாரினதும், பழைய மாணவர், ஆசிரியர் களினதும் பெரு முயற்சியினால் ஒன்றிணைக்கப்பட்டு தரமுயர்த்தப் பட்டது.

மட்டக்களப்பு மாவட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமை யாற்றிய எம். எம். சமீம் அவர்கள் இப்பாடசாலையைத் தரம் உயர்த்தவேண்டுமென முன்னாள் கல்வி அமைச்சர் கௌரவ பதியுதீன் மஹ்மூது அவர்களிடம் சிபாரிசு செய்தார். அமைச்சர் அவர்களின் அனுமதியின்படி 1974-1-2ந் திகதி இவ்விரு பாடசாலைகளும் ஒன் றிணைக்கப்பட்டு மகா வித்தியாலயமானது.

மருதமுனையைச் சேர்ந்த எஸ். செயினுலாப்தீன் என்பவர் அப்போது அதிபராகக் கடமையாற்றினார்.

அவருக்குப் பிறகு பொத்துவில் எம். எஸ். முகைதீன் அதிப ரானார்.

1976 - 1977ம் ஆண்டுகளில் இந்நூல் ஆசிரியர் இம்மகா வித்தி யாலய அதிபராகக் கடமையேற்றார். இம்மகா வித்தியாலயம் தர முயர்த்தப்படுவதற்கும், இங்குள்ள கட்டிடங்கள் பல உருவாகுவதற் கும் இவர் பாடுபட்டுள்ளார். 1982ம் ஆண்டிலும் சில மாதங்கள் அதிபராக இவர் இருந்தார்.

இப்பாடசாலையின் வளர்ச்சியில் சிரத்தையுடன் ஈடுபட்டிருந்த இவரை சில சுயநலமிகள் அரசியல் பழிவாங்கலாக தூர இடத்துக்கு இடமாற்றஞ் செய்தனர். இவரைப்போலவே, அரசியல் காரணமாக இடமாறிவந்த மாத்தளை வை. மஹ்றூப் என்பவரிடம் அவர் பாட சாலையை ஒப்படைத்துச் சென்றார். இந்நூலாசிரியரின் வழியில் வை. மஹ்றூப் பாடசாலையை நடாத்தினார்.

வை. மஹ்றூப் அவர்களுக்குப் பின்னர் டி. எல். கே. பாவா, எச். எம். எம். இப்றாகீம், ஏ. எம். எஸ். முகம்மது ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றினர்.

1987ம் ஆண்டு ஏறாவூரைச் சேர்ந்த யூ. எல். எம். ஹனிபா அதிபராகக் கடமையேற்றார். இவர் விலசிச் செல்ல, எ. எல். மீரா சாஹிபு தற்காலிக அதிபராகச் சிலகாலம் பணிபுரிந்தார். அதன் பின்னர், மட்டக்களப்பு எம். ஏ. எம். இஸ்மாயில் அதிபர் பதவியை ஏற்றார்.

தற்போது ஓட்டமாவடி, ஐ. எல். முகம்மது லெவ்வை அதிபராகக் கடமைபுரிகின்றார்.

இப்பாடசாலையின் வளர்ச்சி ஆரம்பத்தில் சில உள்ளூர் அரசியல்வாதிகள் தலையீடு காரணமாக தடைப்பட்டிருந்தது. இவ்வூரைச் சேர்ந்த பல நல்லாசிரியர்களை இவர்கள் அரசியல் பழிவாங்கலாக இடமாற்றஞ் செய்தனர். இவர்களுடைய அரசியல் செல்வாக்கு இப்போது குறைந்துள்ளதனால் இவர்களது தலையீடும் முற்றாக ஒழிந்துள்ளது.

இப்பாடசாலையின் வளர்ச்சியில், மீனவர் நலன்புரிச் சங்கம், பெற்றார் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம், இக்பால் சன சமூக நிலையம், மாணவர் ஒன்றியம் என்பன கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றன.

இப்பாடசாலை தரமுயர்த்தப்பட்டபோதிலும், இதன் கல்வித் தரம் இன்னும் உயர்ச்சியடையவில்லை. எதிர்காலத்தில் இப்பாடசாலையில் விஞ்ஞானம், வர்த்தகம் போன்ற துறைகளில் உயர்கல்வி பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்படல் வேண்டும்.

தற்காலத்தில் இப்பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்கள், பாடசாலை விஸ்தரிப்புக்குத் தேவையான காணிகளைப் பெறுவதற்கும். பாடசாலைச் சுற்றுமதில் அமைப்பதற்கும் பாடுபட்டு வருகின்றனர். பெற்றார், பழைய மாணவர், புதிய மாணவர், நலன் விரும்பிகள், ஆசிரியர்கள் முதலானோரின் ஒத்துழைப்பு இப்பாடசாலைக்கு நிறையவே உண்டு. ஆதலால், இப்பாடசாலை எதிர்காலத்தில் வாழைச்சேனை மக்களின கல்வித் தேவையை பூரணமாக வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வாழைச்சேனையில் பாடசாலை அமைக்கப்பட்ட வரலாற்றை ஆராயும்போது, தற்போது அமைந்துள்ள இடத்தில் 1943ம் ஆண்டளவிலேயே ஆண் - பெண் பாடசாலைகள் உருவாகியிருந்ததை அறிய முடிகின்றது.

பழைய தபால் கந்தோருக்கு அண்மையில் ஒரு மிஷன் பாடசாலை இருந்தது என்றும், இப்பாடசாலையிலேயே முஸ்லிம் மாண

வர்கள் கல்வி கற்றனர் என்றும் கூறப்படுகின்றது. இம்மிஷன் பாடசாலை வாழைச்சேனை பெரிய பள்ளிவாசலுக்கு அண்மையில் கொண்டுவரப்பட்டு சிறிது காலம் இயங்கியது.

சேர் ராசிக் பரீத், ரி. பி. ஜாயா போன்றோர் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல பிரதேசங்களில் புதிய பாடசாலைகளை உருவாக்கினர். அவர்களின் முயற்சியினால் உந்தப்பட்டவர்கள் தற்போதுள்ள இடத்தில் ஆண், பெண் பாடசாலைகளை உருவாக்கினர்.

ஆரம்பத்தில் ஓலைக் கூரையும், களிமண் சுவரும் கொண்ட கொட்டில்களிலேயே பாடசாலைகள் இயங்கின. தமிழ் ஆசிரியர்களே போதித்துவந்தனர்.

1973ம் ஆண்டுவரை இப்பாடசாலைமூலம் கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்கு மாணவர் தோற்றவில்லை. 1973ம் ஆண்டு மார்கழிப் பரீட்சைக்குப் பெண்கள் பாடசாலையிலிருந்து இரு மாணவியர் தோற்றினர். அவர்கள் இருவரும் இப்போது ஆசிரியைகளாக இருக்கின்றனர்.

ஆண்களின் கல்வி பெரும் பாதிப்புக்குள்ளாகியே இருந்தது.

இன்று சமூகத்தில் எல்லாரும் கல்வி பெறவேண்டுமென்ற கருத்துப் பரவி வருகின்றது. இது ஓர் ஆரோக்கியமான நிலைமை என்றே கூறவேண்டும்.

பிறைந்துரைச்சேனை அ. மு. க. வித்தியாலயம் 1960களில் ஆரம்பிக்கப்பட்டது.

பிறைந்துரைச்சேனை தெற்கு சாதுலிய்யா வித்தியாலயம் இந்நூலாசிரியரின் முயற்சியால் 1992 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது. பெரிய பள்ளிவாசல் காணியில் வாழைச்சேனை ஜும் பள்ளிவாசல் வித்தியாலயம் என்ற பெயரில் ஒரு ஆரம்பப் பாடசாலை ஆரம்பிப்பதற்கு இந்நூல் ஆசிரியரும் இக்பால் சனசமூக நிலையமும், பள்ளிவாசல் பரிபாலன சபையும் இணைந்து நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

# சங்கங்களும் அமைப்புகளும்

வாழைச்சேனையில் பல சங்கங்களும் அமைப்புகளும் காலத்துக்குக்காலம் உருவாகி செயல்பட்டு வந்துள்ளன.

**1. இக்பால் சனசமூக நிலையம்:**

கடந்த முப்பது ஆண்டுகளாக இயங்கிவருகின்றது. வை. அகமது, எம். ஏ. சலாம், யூ. எல். தாவூத், ஏ. எல். சாகீது, எம்.எஸ். ஏ. காதர், எல். ஐ. அப்துல்லாஹ் ஹாஜியார், பி. ரி. எம். புகாரி எம். எல். முகைதீன், எஸ். ஏ. செய்யது முகம்மது மௌலானா, ரி. எல். முகம்மது லெப்பை, எஸ்.எல். எம். சுபைர், எஸ். எ. மீரா சாஹிபு ஆகியோர் இதன் ஆரம்ப கால அங்கத்தினராவர். எம். சி. எம். இஸ்மாயில் நீண்டகாலம் செயலாளராகக் கடமைபுரிந்தார்.

தற்போது ஏ. எம். ஏ. ரஹ்மான் தலைவராகவும், ஏ. ஜே. சதக்கா செயலாளராகவும் செயலாற்றுகின்றனர்.

இக்பால் சனசமூக நிலையம், ஆரம்பத்தில் இக்பால் இளைஞர் முன்னேற்றக் கழகம் என்ற பெயரியேயே இயங்கியது. பல முன்னேற்றமான செயற்பாடுகளை இக்கழகம் செய்துள்ளது. இப்பகுதியில் முதன் முறையாக ஒரு வாசிகசாலையை இக்பால் இளைஞர் முன்னேற்றக் கழகம் பல ஆண்டுகளாக இயக்கியது.

கிராம சபைத் தேர்தலில் 1969ம் ஆண்டு எஸ். எல். எம். சுபைர், எம். எச். எம். முகைதீன் ஆகியோரை நிறுத்தியதன்மூலம் அரசியலிலும் பங்குபற்றியது.

**2. வாழைச்சேனை முஸ்லீம் சமூக சேவைகள் அமைப்பு:**

(MSSO) ஒன்று 1991ம் ஆண்டு வை. அகமதுவைத் தலைவராகவும், எம். ஐ. அப்துல்லாஹ் ஹாஜியாரை செயலாளராகவும் கொண்டு அமைக்கப்பட்டது. இவ்வமைப்பு வாழைச்சேனை முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. வாழைச்சேனை தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட செம்மண்ணோடை, மாவடிச்சேனை, பிறைந்துரைச்சேனை, வாழைச்சேனை 4ம், 5ம், வட்டாரங்கள் பாலக்காடு உட்பட வாகரைப் பிரதேச சபைக்குட்பட்ட காரமுனை, கேணி நகர், ஹிஜ்ரா நகர், மேவான்குளம், ரிதிதென்ன, ஜயந்தியாய, அசலபுர ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய ஒரு உதவி அரசாங்க அதி

பர் பிரிவினை முஸ்லிம்களுக்கு உருவாக்க வேண்டும் என்ற இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்கிறது.

3. இஸ்லாமிய நன்னெறி இயக்கம்:

ஈ. எல். இபுறாலெவ்வையைத் தலைவராகவும், ஐ. எல். ஏ. கபூரைக் காரியதரிசியாகவும் கொண்டு இயங்கிவருகின்றது. மார்க்கக் கல்விப் போதனையில் இவ்வியக்கம் அக்கறை காட்டுகிறது.

4. வை. எம். எம் ஏ:

யு. அகமத் ஆசிரியர் தற்போது தலைவராக கடமையாற்றுகிறார். எம். ஐ. ஷஹதர் அலி ஆசிரியர் செயலாளராக உள்ளார். இவ்வியக்கம், சூறாவளியின் பின்னர் கிராமத்தின் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டு கணிசமான சேவையினைச் செய்துள்ளது. இதன் ஆரம்பத் தலைவராக எம். எஸ். எம். நவாஸ் ஆசிரியர் இருந்தார்.

வை. எம். எம். ஏ. அமைப்புக்கு என தனிக் காரியாலயக் கட்டிடமும் உண்டு.

5. ஜனாசா நலன்புரிச் சங்கம்:

எஸ். எம். றம்ளார், பி. எம். இஸ்மாயில் ஆகியோர் முறையே தலைவராகவும். செயலாளராகவும் கடமையாற்றுகின்றனர். இச்சங்கம் சமூக சேவையில் ஈடுபட்டுள்ளது.

6. இக்பால் இளைஞர் விவசாயக் கழகம்:

ஏ. அச்சிமுகம்மதுவின் தலைமையில் இயங்குகிறது.

7. இஸ்லாமிய வாசிகசாலை:

எம். ரி. எம். அஸ்ரப் ஆசிரியரைத் தலைவராகவும், எ. ஆர். சம்சுதீனைக் காரியதரிசியாகவும் கொண்டு இயங்குகிறது. அறிவுப் பணியாற்றுகிறது. ரி. எல். இஸ்ஹாக் மௌலவி இவ்வாசிகசாலை இயங்குவதற்கு பணியாற்றுகிறார்.

8. அல்அக்ஸா விளையாட்டுக் கழகம்:

எம். எஸ். சுபைதீன் ஆசிரியர் தலைவராகவும், எம். எல். எம் பௌசுல் அமீன் காரியதரிசியாகவும் இருக்கின்றனர்.

9. மக்கா விளையாட்டுக் கழகம்:

கே. பி. எம், முஸ்தபா மனேஜர் தலைவராகவும், ஏ. மன்சூர் காரியதரிசியாகவும் உள்ளனர்.

10. மதீனா விளையாட்டுக் கழகம்:

எஸ். ஏ. மீராசாஹிபு தலைவராக உள்ளார்.

11. இளைஞர் கழகம் 4ம் வட்டாரம்:

எ. ஜே. பிர்தெளவ்ஸ் ஆசிரியர் தலைவராக இருக்கிறார்.

12. இளைஞர் கழகம் 5ம் வட்டாரம்:

எம். ஐ. ஆரிப் தலைவராக உள்ளார்.

13. நட்புறவு விளையாட்டுக் கழகம்:

தலைவர் எம். எஸ். முகம்மதுதம்பி, செயலாளர் எம். ஐ. அப்துல்லாஹ் ஹாஜியார் ஜே. பி. இவ்விளையாட்டுக் கழகமே வாழைச்சேனையில் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தில் மல்யுத்த வீரர்கள் உருவாக்கப்பட்டனர். அகில இலங்கை ரீதியிலான போட்டிகளிலும் பங்குபற்றினர்.

இவ்வமைப்புகள் விளையாட்டு, இளைஞர் முன்னேற்றம் ஆகிய துறைகளில் செயலாற்றி வருகின்றன.

பின்வரும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இயங்கி வருகின்றன.

1. வாழைச்சேனை ஐந்தாம் வட்டாரம் மேற்கு.
   தலைவர்: எம். ஏ. சி. எம். புகாரி மௌலவி.
   செயலாளர்: ஏ. ஜே. எம். பிர்தெளவ்ஸ் ஆசிரியர்.
   தனாதிகாரி: எம். எஸ். ஏ. காதர்.

2. வாழைச்சேனை நான்காம் வட்டாரம்.
   தலைவர்: எஸ். எல். ஆப்தீன்
   காரியதரிசி: யூ. எல். பீர்முகம்மது.

3. வாழைச்சேனை ஐந்தாம் வட்டாரம் தெற்கு.
   தலைவர்: என். எம். முகம்மதுதம்பி.
   செயலாளர்: பி. பிஸ்தாமிரவூப்.
   தனாதிகாரி: எச். எம். நஜீப்.

4. பிறைந்துரைச்சேனை மேற்கு.
   தலைவர்: யூ. எல். தாவூத்.

5. பிறைந்துரைச்சேனை தெற்கு.
   தலைவர்: எம். ஐ. சலீம்கான்.

மீன் பிடியாளர்களின் நலன்களைக் கவனிப்பதற்கு கே. சாஹுல் ஹமீது ஹாஜியார் தலைவராகவும், எஸ். எல். சரீப் ஹாஜியார்

காரியதரிசியாகவும் கொண்ட சலாமிய்யா மீனவர் சங்கமும், ஏ. சி. ஹயாத்து முகம்மதுவைத் தலைவராகவும், அ. ஆதம்பாவாவை காரிய தரிசியாகவும் கொண்ட கிலுறிய்யா மீனவர் சங்கமும் இயங்கி வரு கின்றன.

மசூறா சபை

பள்ளிவாசல் நிருவாக சபைக்கு உறுப்பினர்களைத் தெரியவும், காலத்துக்குக் காலம் ஏற்படும் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்கவும் 1990ம் ஆண்டு ஒரு மசூறா சபை உருவாக்கப்பட்டது. இச்சபையில் எம். ஐ. அப்துல்லாஹ் ஹாஜியார், வை. அகமது எம். எஸ். மீரா சாஹிபு, எம். ஹசன், ஏ. எல். இஸ்மாயில் மௌலவி ஆகியோர் இடம்பெற்றனர். இச்சபை இயங்கி 1990ம் ஆண்டில் பள்ளிவாசல் நிருவாக சபையைப் புதிதாகத் தெரிவு செய்தது.

மசூறா சபையின் செயல்பாடு பலராலும் பாராட்டப்பட்டது. இச்சபையின் தாற்பரியத்தை விளங்கிங்கொள்ளாத சிலர் இச்சபையின் முயற்சியை முறியடித்தனர். தற்போது மசூறா சபையின் தேவை உணரப்பட்டு வருகிறது.

கிராமத்தில் குழப்பமில்லாத நிருவாக அமைப்பினை உருவாக்கு வதற்கு மசூறா சபை அவசியம் என்பதை காலம் கட்டாயப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அறிஞர்கள், ஆலிம்கள், எழுத்தாளர்கள்

வாழைச்சேனையில் மார்க்க அறிஞர்கள் பலர் வாழ்ந்துள்ளனர். மர்ஹூம் மகுமூது ஆலிம் குறிப்பிடத்தக்க மார்க்க அறிஞராவார். முப்பது வருடங்களுக்கு மேலாக அவர் பெரிய பள்ளிவாசல் கதீப் ஆகக் கடமையாற்றினார். உர்து, பார்சி, ஹிந்தி, தமிழ், அறபு ஆகிய மொழிகளில் தேர்ந்தவர். குர்ஆன் மத்ரஸா ஒன்றை நடத்தினார் பல மாணவர்கள் அவரிடம் மார்க்கக் கல்வியைப் பெற்றனர்.

சின்னப் போடியார் மகன் என அழைக்கப்பட்ட முகம்மது இஸ்மாயில் ஆலிமும் சிறந்த மார்க்க அறிஞர். அவர் மார்க்கக் கல்விப் போதனையில் ஈடுபாடுள்ளவராக இருந்தார். தற்காலத்தில் எம். பி. ஏ. ஏ. முஸ்தபா ஆலிம், எஸ். எச். எம். முஸ்தபா ஆலிம் ஆகிய இருவரும் மார்க்கப் போதனையில் மிகவும் ஈடுபாடு காட்டி வருகின்றனர். எம். பி. ஏ. ஏ. முஸ்தபா ஆலிம் பெரிய பள்ளிவாசல் கதீபாக சேவையாற்றுகிறார். அத்துடன் கோறளைப்பற்று காதியாகவும் உள்ளார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த எழுத்தாளர்கள் வரிசையில் வை. அகமத் முதலிடத்தைப் பெறுகிறார். இவர் சாஹித்யமண்டல பரிசில் பெற்ற நாவலாசிரியர், சிறுகதையாசிரியர். 1992ம் ஆண்டு முஸ்லிம் கலாச்சார அமைச்சு 'இலக்கிய வேந்தர்' எனப் பட்டமளித்து பொன்முடிப்பு வழங்கியும் கௌரவித்தது.

எம். சி. எம். இஸ்மாயில் பத்திரிகை நிருபராகவும், ஆசிரியராகவும் கடமையாற்றினார். எழுத்துத்துறையில் ஈடுபட்டார்.

ஏ. எம். ஏ. ரஹ்மான் (அமர்) நல்ல கவிஞர், சிறுகதைகளையும் எழுதியுள்ளார். இவர் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

ஏ. ஜே. சதக்கா ஆசிரியராகப் பணி செய்கிறார். இவர் சிறந்த சிறுகதையாசிரியர். அண்மையில் முஸ்லிம் கலாசார அமைச்சினால் சிறுகதைக்குப் பரிசளிக்கப்பட்டார்.

வாழைச்சேனை இஸ்மாயில் என்பவரும் கதைகள் எழுதியிருக்கிறார். இவரும் ஆசிரியராகப் பணிபுரிகிறார். இவருடைய தம்பி எச். எம். ஆதம்லெப்பையும் சிறுகதை எழுதிவருகிறார். இவரும் ஓர் ஆசிரியரே.

# வாழைச்சேனையின் முதல் மூன்று ஆசிரியர்கள்

டி. எல். கே. பாவா வாழைச்சேனையின் முதலாவது ஆங்கில ஆசிரியராவார். சிறந்த விளையாட்டு வீரர். அவர் அந்நூர் மகா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினார். உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சேவைசெய்து இளைப்பாறிவிட்டு வெளிநாடு சென்றுள்ளார்.

எம். எஸ். முகம்மதுதம்பி இரண்டாவதாக நியமனம் பெற்ற ஆசிரியர். இவர் ஆசிரியர் சேவையில் சிறிதுகாலம் இருந்தார். பின்னர் பொலிஸ் சேவையில் கடமையேற்றார். பின்னர் இளைப்பாறி வெளிநாடு சென்றார். இப்போது தனிப்பட்ட தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

வை. அகமது மூன்றாவது ஆசிரியர். பயிற்றப்பட்ட பட்டதாரி. அதிபராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார். தற்போது மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றுகிறார்.

# கோறளைப்பற்று முஸ்லிம்கள் - சில கருத்துக்கள்

(இக்கட்டுரை 1980ம் ஆண்டு எழுதப்பட்டது. இது பின்னிணைப்பாகச் சேர்க்கப்படுகிறது.)

இலங்கை முஸ்லிம்களின் சனத்தொகையில் கணிசமான பங்கினர் கிழக்கிலங்கையிலே வாழுகின்றனர். பொத்துவில் தொடக்கம் புல்மோட்டை ஈறாகவுள்ள கிழக்கிலங்கைக் கரையோரம் முழுவதும் ஆங்காங்கு சின்னஞ்சிறு கிராமங்களிலும், நகர்ப்பாங்கான ஊர்களிலும் முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் உள்ளன. இப்பகுதிகளில் முஸ்லிம்களும் தமிழ் மக்களும் இன, மத பேதமின்றி இணைந்து, மொழியினால் ஒன்றித்து வாழ்வது, தேசிய சமூகங்களிடையே சமரச உணர்வுகள் செழித்துள்ளதை சான்றுப்படுத்துகின்றன. இக்கிராமங்களில் ஒரு பகுதி முஸ்லிம்களின் குடியிருப்பாக இருக்கையில், மறு பகுதி தமிழ் மக்களின் குடியிருப்புக்களாக உள்ளன. இவர்களிடையே, தமிழ் மொழியும் ஓரளவு கலாசாரத் தொடர்புகளும், இப்பிணைப்பினை ஏற்படுத்தும் சக்திகளாய் காணப்படுகின்றன.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களையும், கிழக்கு மாகாணம் உள்ளடக்கியுள்ள மட்டக்களபு பொதுவாக மூன்று மாகாணங்களுக்கும் தலைப்பட்டினமாகும் மட்டக்களப்பின் வடக்கு, ஏறாவூர் கோறளைப்பற்று என அழைக்கப்பட்டது. இன்று இப்பகுதி மூன்று உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவாகவுள்ளன. கோறளை தெற்கிற்கும், வாகரைக்கும் இடையே இருப்பது கோறளைப்பற்று. இவ்வெல்லைக்குட்பட்ட முஸ்லிம் கிராமங்களான வாழைச்சேனை, ஓட்டமாவடி, மிறாவோடை, மாவடிச்சேனை ஆகிய கிராமங்களுடன் இன்னும் சில குடியிருப்புக்களையும் சேர்த்து, மொத்தம் ஏறக்குறைய 29680 (1) முஸ்லிம்கள் இங்கு வாழ்கின்றனர்.

இங்கு வாழும் முஸ்லிம்களின் பாரம்பரியம்பற்றிய வரலாற்றுச் சான்றுகள் இதுவரை அகப்படவில்லை. கண்டி இராச்சிய எல்லையாகவிருந்த இப்பகுதி ஒருகாலத்தில் கண்டி மன்னர்களின் ஆளுகைக்குட்பட்டிருந்தது போத்துக்கேயர் காலத்தில் அவர்களின் கொடுமைக்கு ஆற்றாது கோட்டை இராச்சியத்தைவிட்டு வெளியேறிய முஸ்லிம்கள் கண்டியை ஆட்சிசெய்த சேனரதன் காலத்தில், இப்பகுதியில் அவனால் குடியேற்றப்பட்டிருக்கலாம் அல்லது கண்டி இராச்சியத்தில் இருந்து குடியேற்றப்பட்டிருக்கலாம். இதற்கான சான்றுகள் வரலாற்றில் உண்டு. இன்னும் மத்திய கிழக்கில், எகிப்து, மொரோக்கோ, சிரியா ஆகிய நாடுகளில், ஆட்சியாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த புரட்சியாளர்கள் நாடு கடத்தப்பட்டபோது

அவர்கள் இலங்கையைப் புகலிடமாகக் கொண்டனர். அவ்வாறு மொரோச் சோதேசத்தில் இருந்து வந்த ஒரு சாரார் இங்கு குடியேறினர். (2) ஆனால் இதற்கான சரியான ஆதாரம் இன்னும் கிடைக்கவில்.

கோறளைப்பற்றில் வாழும் முஸ்லிம்களின் வாழ்க்கை முறை கலாசாரத் தொடர்புகள் ஆகியவற்றை நுணுகி ஆராயின், பெரும்பாலும் கண்டிப் பகுதியில் வாழும் முஸ்லிம்களின் வாழ்க்கையில் காணப்படும் அம்சங்கள் இவர்களோடு தொடர்புற்றிருப்பதைக் காணலாம். இதனால் இவர்கள் கண்டிப் பகுதிகளில் வாழ்ந்து, அங்கு குடியேற்றப்பட்டிருக்கலாம் எனத் துணியலாம் கண்டிக்கும் கிழக்கிலங்கைக்குமிடையே குறுகிய இடைவெளியும், செங்கலடி ஊடாகப் போக்குவரத்துச் செய்த பழங்காலப் பாதையும், இத்தொடர்பினை மேலும் வலுப்படுத்தியிருக்கமுடியும், கிழக்கிலேயிருந்து, உப்பு முதலிய பண்டங்கள் கண்டிக்கு தாவரங்களில் எடுத்துச் செல்லப்பட்டன. அங்கிருந்து மலைநாட்டு விளைபொருட்கள் இங்கு கொண்டுவரப்பட்டன. இவற்றுக்கான வரலாற்று ஆராரங்கள் உண்டு.

இன்னொரு முக்கிய அம்சம் கலாசாரத் தொடர்பு எனலாம்: கிழக்கிலங்கையின் தென்பகுதியான அம்பாறை மாவட்டத்தில் வாழும் முஸ்லிம் பெண்களின் நடையுடை பாவனைகளிலும், வடபகுதியில் வாழும் பெண்களின் நடையுடை பாவனைகளிலும் பெருத்த வேறுபாடுண்டு. இன்றும் தென்பகுதி முஸ்லிம் பெண்கள் சேலையுடுத்தும் போது முந்தானைக் கரையை பின்பக்கமாக மடித்துத் தலையில் முக்காடிடுவர். இப்பழக்கம் இலங்கையில் எப்பகுதி முஸ்லிம் பெண்களிடத்திலும் இல்லை. மட்டக்களப்பு மாவட்டத்து முஸ்லிம் பெண்களும் கண்டி மற்றும் மேல், தென், வடமத்திய மாகாணங்களில் வாழும் முஸ்லிம் பெண்களும் ஒரே மாதிரியாகச் சேலையுடுத்து முக்காடிடுவதும் முக்கிய அம்சமாகும். மேலும் இவர்களின் சில பழக்க வழக்கங்களும் கண்டி முஸ்லிம்களின் பழக்க வழக்கங்களுடன் ஒற்றுமையாக இருப்பது அவதானிக்கத்தக்கது. தற்காலப் பெண்களிடத்தும் ஆண்களிடத்தும் நாகரிக மோகம் தலைதூக்கி இருப்பதால், இவற்றை அவதானிக்க முடியாவிட்டாலும் வயோதிபர்களிடத்தில் இப்பண்பாட்டின் போக்கினைக் காணலாம்.

இவ்வாறு கண்டி மற்றும் பகுதிகளிலிருந்தும் குடியேறிய முஸ்லிம்களின் கலாசாரப் போக்கிலும், மத வழிபாட்டிலும், தென்னிந்தியாவிலிருந்து வியாபாரிகளாக வந்த முஸ்லிம் அறிஞர்கள் செல்வாக்குச் செலுத்தினர், குறிப்பாகக் காயல்பட்டின அறிஞர்கள் இப்பகுதியில் வியாபாரத் தொடர்புகளைக் கொண்டிருந்தனர். இங்கு காணப்படும் வழிபாட்டு முறைகள், (3) தரீக்காக்களான (4) ஷாதுலியா, (5) காதிய்யா என்பனவும், (6) சந்தூரி, (7) மௌலிது வைபவங்கள் நடாத்தும் முறைகள், (8) அவ்லியாக்களைக் கொண்டாடுவதும்

கள் நடாத்தும் முறைகள், (8) அவ்லியாக்களைக் கொண்டாடுவதும் இவர்களின் செல்வாக்கினால் ஏற்பட்டவையே. இங்கு அன்றாடம் மக்கள் வாழ்க்கையில் உபயோகிக்கப்படும் சில சொற்பிரயோகங்களும் கூட அவர்களால் புகுத்தப்பட்டவையே. பாலாணம், புளியாணம் போன்ற உணவு வகைகளும், காயல்பட்டினவாசிகளுடையவை.

காயல்பட்டினம், திருச்செந்தூர் என்னும் சைவத்தலத்துக்கு அண்மையிலுள்ள ஓர் ஊராகும். இங்கு முஸ்லிம்கள் தமது தனித்துவத்தைப் பேண பல வழிகளிலும் முயன்றுள்ளனர். அதன் காரணமாக இலங்கையில் குடியேறி, வியாபாரம் செய்த காயல்பட்டினத்தார் இங்கும் தமது தனித்துவத்தினை நிலைநாட்ட, சில புதிய சடங்குகளைக் கையாண்டனர் என்பது தெளிவானதாகும்.

கோறளைப்பற்று முஸ்லிம்களின் திருமணச் சம்பிரதாயங்களில் தமிழ் கலாசாரப் பண்புகள் ஊடுருவியுள்ளன. தாலி கட்டுதல், திருமண வீட்டில் குரவையிடுதல், புதுமணத் தம்பதியினருக்கு முதல் உணவாக பால்பழம் அருந்தக் கொடுத்தல், செப்புக் கொண்டுபோதல், திருமண வீட்டு அலங்கார முறைகள் என்பனவற்றிலும் இவற்றைக் காணலாம். மணவீட்டின் முற்றத்தில் அமைக்கப்படும் பந்தல் கால் ஒன்றில் சீலையைப் பாவாடைபோல் சுற்றி, தென்னம்பாளையும், குரும்பையும் சேர்த்துக் கட்டிவைப்பதும், மணமக்கள் தங்கும் அறையினுள் குத்து விளக்கு ஏற்றிவைப்பதும் இஸ்லாமிய கலாசாரப் பண்புகளிலிருந்தும் வேறுபட்டவையாகும். இன்று இப்பழக்கங்கள் அருகிவருகின்றன.

கோறளைப்பற்றில் வாழும் முஸ்லிம்கள் பெரும்பான்மையோர் ஏழைகளாகவும், படிப்பறிவற்றவர்களாகவும் இருக்கின்றனர். விவசாயமே இவர்களின் தொழில். மீன் பிடித்தலும் உண்டு. சிறுபான்மை வியாபாரிகளாகவும் ஏனைய தொழில்களைச் செய்வோராயுமுள்ளனர் பொதுவாகக் கஷ்ட சீவனமே நடத்துகின்றனர். விவசாயத் தொழிலில் ஈடுபடுவோர், விவசாயக் கூலிகள் என்போர், மூலதனம், வேலையின்மை காரணமாக செல்வந்தர்களால் சுரண்டப்படுகின்றனர். மீன் பிடித்தல் ஓரளவு நவீனமயப்படுத்தப்பட்டுள்ளபோதிலும் போதிய உபகரணங்களை எல்லா மீனவர்களும் பெறவில்லை. எனவே விவசாயிகள், மீனவர்கள் தொழிலாளர் வாழ்க்கையில் வளமில்லை.

சிறந்த வீட்டு வசதியோ, குடிநீர் வசதியோ இன்றி இவர்கள் வாழ்வதற்கு வறுமை காரணமாக இருக்கலாம். படிப்பறிவு பரவாமைக்கு வேறு காரணமுண்டு. ஒரு காலத்தில் இலங்கை அந்நியரின் ஆட்சிக்குட்பட்டிருந்தபோது, அவர்களின் கலாச்சாரத்தினை பிரதிபலிக்கும் பள்ளிக்கூடங்களில் கற்பதற்கு இலங்கை முஸ்லிம் பெற்றோர் தமது குழந்தைகளை அனுப்பவில்லை. அதனால் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி தடைப்பட்டது என்பது வரலாற்

றுண்மை. இப்பகுதி முஸ்லிம்களிடத்திலும் இம்மனோபாவம் இருந்தது. இங்கு அமைக்கப்பட்டிருந்த மிஷனறிகளின் பாலர் பாடசாலைகளில்தானும் இவர்கள் சேர்ந்து படிக்கவில்லை. சுதந்திரத்துக்குப் பின் தேசிய அரசுகள் அமைத்த பாடசாலைகளில் படித்தவர்களே ஓரளவு எழுத வாசிக்கத் தெரிந்தவராயுள்ளனர். மார்க்க அறிவினைப் போதிக்கக் கூடிய மத்ரஸாக்களோ, பாடசாலைகளோ நன்கு அபிவிருத்தி அடையாத காரணத்தால் இப்பகுதி இன்றும் அறியாமையிலேயே மூழ்கிக் கிடக்கின்றது. பெண்கள் கல்வி கற்காமையினால், மூடநம்பிக்கைகள், சுகாதாரச் சீர்கேடுகள், பாலிய திருமணங்கள், திருமணப் பிரிவுகள் சிசு, தாய் மரணங்கள், நோய் முதலியன குறிப்பாகக் காணப்படும் தீமைகள் எனலாம்.

இவ்வாறு கோறளைப்பற்று வாழ் முஸ்லிம்களின் பாரம்பரியங்கள்பற்றி ஆராய்ந்தால் இன்னும் பல உண்மைகளைக் காணமுடியும். விரிவஞ்சி சுருக்கிக்கொள்வோம். இதனைச் சமூகவியல் மாணவர்கள் எதிர்காலத்தில் நல்லதொரு ஆய்வாக மேற்கொள்ளல் வேண்டும்.

குறிப்பு:-

1. 1981 சனத்தொகைக் கணிப்புப்படி கோறளைப்பற்று முஸ்லிம்கள்.

| | |
|---|---|
| முறக்கொட்டாஞ்சேனை | 15 |
| கல்குடா | 10 |
| புதுக்குடியிருப்பு | 50 |
| வாழைச்சேனை (மு) | 7500 |
| மிறாவோடை | 7000 |
| ஓட்டமாவடி | 7000 |
| பிறைந்துறைச்சேனை | 5000 |
| பேரில்லாவெளி | 50 |
| முறுத்தானை | 50 |
| வாகனேரி | 2400 |
| களிச்சை | 605 |

2. வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் கதீபாவாக நீண்ட காலம் சேவையாற்றி தமது 90 வயதில் இறையடியெய்திய மூதறிஞர் மகுமூது ஆலிம் அவர்கள் கூறிய செய்தி.

3. தரீக்கா - அறபுபதம்: இஸ்லாமிய மார்க்க மெய்ஞ்ஞான வழிமுறை பற்றியது.

4 – 5. ஷாதுலியா, காதிரிய்யா: மெய்ஞ்ஞான வழிமுறைகளை அமைத்த பெரியார்களின் பெயரில் வழங்கப்படுபவை.

6. கந்தூரி: விசேட தினங்களில் கொடுக்கப்படும் அன்னதானம்.

7. மௌலிது: நபிநாயகம் (ஸல்) மற்றும் பெரியார்கள் மீது பாடப்படும் துதிப்பாடல்கள்.

8. அவ்லியாக்கள்: இறைவனின் நல்லடியார்கள் எனப் பெயர் பெற்றோர்.

## கவனிக்கப்படவேண்டியவை :

- மஸ்ஜிதுல்ஹைறராத் கட்டிடக் குழுவில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வை. அஹமது இடம் பெற்றுள்ளார்.
- ஜாமியதுல் நஹ்ஜதுல் இஸ்லாம், அறபிக் கல்லூரியின் நிருவாக சபையில் மு. இ. அசனார் ஹாஜியார் முக்கிய உறுப்பினராவார்.
- எஸ். எச். எம். முஸ்தபா ஆலிம் அவர்கள், வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் பிரதம கதீபாகக் கடமையாற்றுகிறார்.
- அகமது உசைன் ஹாஜியார் அவர்கள், கடந்த நாற்பது வருட காலமாக வாழைச்சேனை ஜும்ஆப் பள்ளிவாசல் முஅத்தினாகச் சிறப்பாகக் கடமையாற்றுகிறார்.
- எம். ஹசன் அவர்கள், பிரித்தானிய கடற்படையில் சேவையாற்றிப் பின்னர், எழுதுவினைஞர் சேவையிற் சேர்ந்தார். கோறளைப்பற்று மேலதிக உதவி அரசாங்க அதிபராகவும் கடமையாற்றினார்.
- பி. ரி. எம். புகாரி அவர்கள் துடிப்புள்ளவர். காகித ஆலையில் பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றினார். 1977 பொதுத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டார். இப்பகுதியிலிருந்து முதன்முதலில் பொதுத் தேர்தலில் போட்டியிட்டவர் இவரே.
- எஸ். எ. மீராசாஹிபு அவர்கள், சுயமாகப் பாடல்களை இயற்றி, இசையமைத்துப் பாடவல்லவர். வானொலியில் இஸ்லாமிய கீதங்கள் பாடியுள்ளார்.

| பக்கம் | பந்தி | வரி | பிழை | சரி |
|---|---|---|---|---|
| 05 | 06 | 11 | முறியடிக்கப்பட்டள | — முறியடிக்கப்பட்டன |
| 05 | 06 | 12 | சிறைச்சேதம் | — சிரைச்சேதம் |
| 09 | 03 | 03 | 300 | — 200 |
| 09 | 03 | 05 | குடியேறினர் | — குடியேறினார் |
| 18 | 05 | 01 | மு. அ. | — இ. லெ. |
| 24 | — | 01 | சாதுரிய்யா | — சாதுலிய்யா |
| 24 | 01 | 03 | சாதுரிய்யா | — சாதுலிய்யா |
| 25 | 01 | 02 | ஹாரிஸ்களை | — ஹாபிஸ்களை |
| 35 | — | — | 1980ம் ஆண்டு | — 1982ம் ஆண்டு |
| 35 | 02 | 03 | மாகாணங்களும் | — மாவட்டங்களும் |
| 36 | 02 | 10 | தாவரங்களில் | — தாவளங்களில் |

முன் அட்டையில்: "மஸ்ஜிதுல்ஹைறராத்" முகப்புத் தோற்றம்.



நாடறிந்த எழுத்தாளர் வை. அஹமத், வாழைச்சேனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எமதூரின்மீது மிக நேசமுடையவர்.

ஆசிரியராக தனது பணியினை மேற்கொண்டு, அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, கல்வித்துறையில் பிரகாசித்தவர். இன்று மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபராகக் கடமையாற்றுகிறார்.

பயிற்றப்பட்ட [illegible] தமிழ் ஆசிரியர் தராதரம், பேராதனைப் பல்கலைக்கழக கலைமாணிப் பட்டம், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் [illegible] மேற் படிப்பு கல்விச் சான்றிதழ் விசேட பட்டம் [illegible] பெற்று கல்விமானாய்த் திகழ்கின்றார்.

எமதூரின் [illegible] ஆசிரியர்களுள் ஒருவராய் விளங்குபவர். எழுத்துத் [illegible] தமது பதினேழாம் வயதில் கால் பதித்தார். 'புதிய [illegible] தலை [illegible]' எனும் நாவலுக்குச் சாஹித்திய மண்டலப் பரிசினை 19?6ம் ஆண்டு பெற்றார்.

சிறந்த சிறுகதையாசிரியர்; கட்டுரையாளர்; கல்விச் சிந்தனையாளர்.

இலங்கை முஸ்லிம் கலாசார அமைச்சு (199?) இவ்வாண்டு, கலாசார விருது விழாவிலே இவருக்கு பொன் முடிப்பு வழங்கி, 'இலக்கிய [illegible]ந்தர்' எனும் பட்டமும் வழங்கிக் கௌரவித்தது.

வாழைச்சேனை [illegible] சனசமூக நிலையத்தை ஆரம்பித்து, சமூகப் பணிகளை மேற்கொண்டார். தற்போது முஸ்லிம் சமூக சேவைகள் அமைப்பு (MSSO) வாழைச்சேனையின் [illegible] இருந்து எங்கள் அமைப்புக்கு வழிகாட்டுகிறார்.

— முஸ்லிம் சமூக சேவைகள் அமைப்பு
([illegible])
வாழைச்சேனை.

சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு.